# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 1 ISSUE - 4

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427-2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**உங்கள் யாவருக்கும் எங்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.**

## மலேசியா ஊழியங்கள்:

' பெந்தேகோஸ்தே சபைகளின் பிழையான உபதேசங்களைக்குறித்தும், அந்நியபாஷைக்குறித்தும் மலேசியாவில் உள்ள பெந்தேகோஸ்தே பாஸ்டர்களுடன் வெளிப்டையாகபேச கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் யாவும் மலேசியாவின் நான்கு மாநிலங்களிலும் வெற்றிகரமாக நடந்ததேறியது. மலேசியாவில் நடந்த இந்த ஊழியங்களுக்காக கூட்டம் ஏற்பாடு செய்தவர்களிடம் எந்த பயண செலவும்-காணிக்கையும் வாங்காமல் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களுடன் கலந்துரையாடல் ஏற்பாடுகளுக்கு என் பங்களிப்பாக ஒருவாரம் என் ஊழிய நாட்களை மட்டுமே மலோசியாவுக்காக ஒதுக்கினேன்.

ஆஸ்ட்ரேலியா ஊழியத்திற்கு போகும் வழியில் மலேசியா இறங்கி என் பயண செலவை இணைத்துக் கொண்டேன். அதனால் மலேசியாவுக்கு செல்ல தனி பண செலவு எதுவும் இன்றி மலேசியா ஊழியத்துக்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு பண செலவு பாரம் உண்டாக்காமல் உதவ முடிந்தது. என்னை உயர்ந்த ஸ்டார் ஓட்டலில் தங்கவைத்து அதன் செலவுகளை பாதர்.ஹென்றி அவர்களே ஏற்றுக்கொண்டார். அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கலந்துறையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து பாஸ்டர்களுக்கும் விசேஷ நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆஸ்ட்ரேலியா ஊழியங்கள்:

ஆஸ்ட்ரேலியா ஊழியங்கள் (தமிழ் மற்றும் மலையாள) இரண்டு பாஷைக்காரர்களுடன் 3 மாநிலங்களில் (விக்டோரியா), மெல்போர்ன், சிட்னி, பெர்த்

டிசம்பர் 2016

ஆகிய இடங்களில் கூட்டங்களை முடித்து ஆசீர்வாதத்துடனும் ஆரோக்கியத்துடனும் **இந்தியா திரும்ப செய்த** கர்த்தருக்கு துதி மகிமை உண்டாவதாக. ஏறைக்குறைய 14 வருடங்கள் கழித்து ஆஸ்ட்ரேலியா நாட்டு ஜாமக்காரன் வாசகர்களை நேரில் சந்தித்தது எனக்கும் அவர்களுக்கும் சந்தோஷத்தை கொடுத்தது. பாசத்தோடும், அன்போடும் அவர்களின் குடும்பத்தில் ஒருவனாக என்னை நினைத்து அவர்கள் பாராட்டின அன்புக்காக, உபசரிப்புக்காக கர்த்தரை துதிக்கிறேன். கர்த்தர்தாமே அவர்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

இந்தியா திரும்பிய இரண்டாவது நாளே நான் இந்தியாவில் **பூனா** நகரத்துக்கு Methodist சபைகளின் கன்வென்ஷனில் பிரசங்கிக்க மறுபடியும் ஒரு நீண்ட பயனம் செய்ய வேண்டியதானது. ஆனாலும் இடைவெளியில்லாத இந்த அலைச்சலில் கர்த்தர் **என்னோடும்-எனக்குள்ளும் இருந்ததால்** எனக்கு களைப்போ உடல்நலக்குறைவோ உண்டாகாதபடி கர்த்தர் காப்பாற்றினார்.

## 1000 - 500 ரூபாய் செல்லாது

' இந்தியாவில் 1000,500 ரூபாய்கள் செல்லாது என்று அறிவித்த செய்தியை ஆஸ்ட்ரேலியா நாட்டில் ஊழியம் செய்யும்போதுதான் கேள்விப்பட்டேன். இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் ஆளும்கட்சி, எதிர்கட்சிகள் யாவரும் இந்த செய்தி கேட்டு இடிவிழுந்ததுபோல் உறைந்துப்போனார்கள் என்று அறிந்தேன்.

இதன் மூலம் குறிப்பாக ஒரு பெரிய கட்சி மட்டும் 1000,500 நோட்டுகள் கன்டெய்னர் மூலமாக தமிழ்நாட்டிலிருந்து கடத்திய பணம் ஒரு அரசாங்கத்தையே நடத்தும் அளவு ஒளித்துவைத்திருந்தனர் என்பதாக அறியலாயிற்று. அப்படிப்பட்டவர்களுக்குத்தான் மகாபெரும் இழப்பு ஏற்பட்டது அதனால் அவர்கள் தளர்ந்துப்போனார்கள். இனி எழுந்திருக்க முடியாதஅளவு அவர்கள் தளர்ந்துபோனார்கள்.

' அப்படியே **தமிழ்நாட்டு ஸ்டார் ஊழியர்கள் கோபுரங்கள், தோட்டங்கள், பெரிய வாசல்கள், இவர்களோடு பல டிவி ஊழியர்கள்** அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இவர்கள் யாவரும் எதிர்ப்பாராத பெரும் பண இழப்பை சந்தித்த இவர்கள் அதிர்ச்சியில் சாப்பாட்டையே மறந்தார்கள். அது உபவாசம் அல்ல. 1000,500 ரூபாய் தாள்களை கோடிகோடியாக தங்கள் கண் எதிரே தாங்களாகவே தங்கள் கைகளாளேயே அந்த பணத்துக்கு தீ வைத்து எரித்து சாம்பலாக்கியது. சாதாராண அதிர்ச்சி அல்லது இழப்பும் அல்ல. பல வருடத்துக்குமுன்பே வருமானவரி துறை அதிகாரிகள் இவர்களில் சிலரை பரிசோதிக்க வந்தபோது கழிவறையில் இவர்கள் ரூபாய்களை எரித்து கரைத்ததின் அனுபவம் இவர்களுக்கு உண்டு. அந்த நஷ்டத்தை பல சுகமளிக்கும் கூட்டங்களில் வழக்கமாக கூறிய பொய் தீர்க்கதரிசன கூட்டங்களில் சேர்த்த **காணிக்கைகளில்** கருப்பு பணத்தை **வெள்ளையாக்கிகொண்டதின்** மூலம் அதை திரும்ப பன்மடங்கு பெருந்தொகையாக பெற்றுக்கொண்டார்கள். பல்வேறு இடங்களில் நடந்த இவர்கள் கூட்டங்களில் மக்கள் இட்ட காணிக்கைகளின் மூலம் **கருப்பு பணத்தை-வெள்ளை பணமாக** இவர்கள் மாற்றி கொண்டதை கேள்விப்பட்டேன். **ஊழியம்** கள்ளபணம் மாற்றும் **சந்தையாக** மாறியது. இவர்கள் ஊழியம் வியாபாரமாகிவிட்டதை கேள்விபட்டு கர்த்தர் மிகவும் வேதனைப்படுவார். இனியாவது மக்களை ஏமாற்றி பெரும் **காணிக்கைகளை** வியாபாரம்ஆக்காமல் இவர்கள் மனந்திரும்ப கர்த்தர் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார். இந்த லட்சணத்தில் **அமெரிக்க அதிபர் தேர்தலைப்பற்றி தீர்க்கதரிசனம்** கூறியவிதம் கண்டால் இவர்கள் திருந்தவேமாட்டார்கள் போலத்தான் எண்ணவேண்டியுள்ளது. 1000, 500 ரூபாய்கள் செல்லாது என்று அறிவித்தது இந்தியா முழுவதும் உள்ள நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும்தான் மிகவும் கொடூரமாக பாதித்தது.

சில்லரை தட்டுப்பாட்டால் பட்டினி சாவுகளும், தற்கொலைகளும் மிகுதியானது மத்திய அரசாங்கம் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல், சரியான திட்டமிடாமல் போனது அரசாங்கம் மக்களுக்கு இழைத்த மிகப் பெரிய துரோகமாகும், ஆந்திராவில் மாத்திரம் 50,000 திருமணங்கள் நின்றுபோயின. அதே சமயம் புதிய 2000 நோட்டுகளை அச்சடிக்கும் நாசிக் என்ற ஊரிலிருந்து பல கோடி புதிய ரூபாய்கள் ஆந்திர மணல் வியாபாரியின் வீட்டில் மட்டும் வந்து சேர்ந்ததாக வருமான வரி அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது காவலில்வைக்கப்பட்டுள்ளார். இத்தனைதொகை ரானுவ பாதுகாப்பு நிறைந்த நாசிக் அச்சகத்திலிருந்து இவர் வீட்டுக்குள் கோடியாய் எப்படி நுழைந்தது. மத்திய அரசில் இதில் யார்க்கெல்லாம் பங்குண்டு என்பதை தோண்ட தோன்டத்தான் இனி சகலஇரகசியங்களும் வெளிவரும். உலக நாடுகள் இதை அதிசயத்தோடு கவனித்து இந்திய பொருளாதார சந்தையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டதால் இந்திய பொருளாதாரம் அடியோடு சரிந்தது என்ற செய்தி எத்தனை கேவலமாகும்.

## கிறிஸ்துமஸ் & புதுவருட வாழ்த்துக்கள்

' **உலக நாடுகளிலும்** குறிப்பாக **இந்தியாவில்** அனைத்து CSI லூத்தரன், மார்தோமா சபைகளில் உள்ள குறிப்பாக பெந்தேகோஸ்தே சபைகளில் உள்ள அனைத்து **ஜாமக்காரன் வாசகர்களும்** என்னுடைய 2017 புதுவருட வாழ்த்துக்கள் தெரிவித்துக்கொள்கிறேன். புது வருடத்தில் நீங்கள் யாவரும் ஆரோக்கியத்தோடும், சமாதானத்தோடும் வாழ உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

' என்னை தங்கள் சபைகளில் உபயோகித்த பிஷப்மார்களுக்கும் ஆயர்களுக்கும் விசுவாசிகளுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

## கேன்ஸர் வியாதியின் கோரம்

' இந்தியா முழுவதும் உள்ள பல மாநிலங்களில் நான் பிரசங்கித்த எல்லா இடங்களிலும் **வீட்டுக்கு** ஒரு ஆள் **கேன்ஸர் வியாதியால்** பாதிக்கப்பட்டிருக்கிறதை அறியும் போது மிகவும் வேதனைப்பட்டேன். அதற்காக 2017 மார்ச் மாதம் 14ம் தேதி இந்த குறிப்பிட்ட வியாதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக **ஒரு நாள் உபவாச பிராத்தனை** செய்ய பாரப்படுகிறேன். இதை வாசிப்பவர்கள் யாராக இருந்தாலும் இந்த வியாதி விஷயமாக **ஜெப பிராத்தனை குறிப்புகளை** என் **சேலம் விலாசத்துக்கு** அனுப்பலாம். அந்த கடிதங்களை ஜெபத்தில் வைத்து ஜெபிப்போம். நாங்கள் ஜெபிக்கும் **அதே தேதியில்** அந்த மாசத்தில் அவரவர் இருக்கும்இடத்தில் நீங்களும் என்னோடு உபவாசித்து இணைந்து ஜெபித்தால் நல்லது. ஜெபக்குறிப்பு **கேன்ஸர்** வியாதிக்காக மாத்திரமல்ல எல்லா வியாதிகளுக்காகவும், குடும்ப பிரச்சனைகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்படும். உங்கள் ஜெப குறிப்பு கூட்டத்தில் உங்கள் **முழு விலாசம்** எழுதி **போன் நெம்பர் இமெயில்** குறிப்பிட்டு எழுதுவது நல்லது.

' **ஜாமக்காரன் பத்திரிகை** தேவைப்படுபவர்கள் உங்கள் **விலாசத்தையும்,** போன் **நெம்பரையும் இமெயில்** மூலமாக எழுதி அனுப்பினால் இலவசமாக ஜாமக்காரனை அனுப்பி தருவோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் எல்லோரோடும் எல்லா நாட்களிலும் நிறைந்திருப்பதாக.

' நான் இந்தியாவில் இல்லாதபோது என் மனைவிவதனி **புஷ்பராஜ்** அவர்கள் பத்திரிக்கை அனுப்பும் ஊழியத்தை சிறப்பாக நிறைவேற்றினார்கள். அந்த சமயத்தில் **பணஉதவி** செய்த அத்தனை வாசகர்களுக்கும் வாழ்த்துதல் கூறுகிறேன். நன்றி.

இந்த கிறிஸ்மஸ் காலங்களில் கர்த்தர் உங்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. ஜெபிப்போம். உங்களுக்காக நானும் ஜெபிக்கிறேன்.

கர்த்தரின் பணியில் என்றும்

**டாக்டர். புஷ்பராஜ்**

# அந்திகிறிஸ்துவின் அடையாளம்

**டாக்டர்.வசந்தகுமார்**

அந்திகிறிஸ்துவின் ஆட்சி காலத்தில் மக்கள் அவனைத் தெய்வமாக வழிபட நிர்ப்பந்திக்கப்படுவது மாத்திரமல்ல, ஒவ்வொருவரும் தங்களுடைய வலது கைகளில் அல்லது நெற்றிகளில் அவனுடைய அடையாளத்தைப் பதிக்கவேண்டியவர்களாகவும் இருப்பார்கள்.

அக்காலத்தில் அந்திகிறிஸ்துவினுடைய முத்தரையைத் தங்கள் கைகளில் அல்லது நெற்றிகளில் பெறாதவர்களினால் கடைகளில் பொருட்களை வாங்கவும் விற்கவும் முடியாத நிலை ஏற்படும் என்பதை வெளிப்படுத்தல் 13:16-17 அறியத்தருகிறது. இம்முத்திரையைப் பற்றி வெளிப்படுத்தல் புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன். அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது. அதனுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு** (வெளிப்படுத்தல் 13:18).

கிறிஸ்துவ உலகில் அந்திகிறிஸ்துவின் அடையாளமான 666 என்னும் இலக்கத்தைப்பற்றி பல்வேறு விதமான கருத்துகள் உள்ளன. அதாவது, இவ்விலக்கம் யாரைக் குறிக்கின்றது. அல்லது எதை அடையாளப்படுத்துகிறது. என்னும் சர்ச்சை முடிவில்லாத தொடர் கதையாக நீண்டுகொண்டே செல்கிறது.

தற்காலத்தில் கிறிஸ்துவுக்கு எதிரானவர்களும், சாத்தானை வழிபடுபவர்களும், தாங்கள் கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படையாக காண்பிப்பதற்காக 666ஐ உபயோகித்து வருகின்றனர். இதனால்தான் சிலருடைய வீடுகளில் அல்லது வாகனங்களில், அல்லது அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களில் இவ்விலக்கத்தை நாம் பார்க்கின்றோம். இதனால் இப்பொழுதே உலகின் இறுதி காலத்தில் வரவிருக்கும் அந்திகிறிஸ்து வந்துவிட்டான் என்று நாம் எண்ணலாகாது. இதைப்போலவே, தொடரிலக்கங்களில் 666 வரும் போதும் அதை அந்திகிறிஸ்துவுடன் தொடர்புபடுத்தக்கூடாது.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்துவர்களைக் கொடூரமான முறைகளில் துன்புறுத்திய **"நீரோ"** என்னும் ரோம அரசனைக் குறிப்பிடும் அடையாளமாக 666 இருப்பதாகக் கருதுகின்றனர்". புராதன மொழிகளில் இலக்கங்களுக்குப் பதிலாக அரிச்சுவடியின் எழுத்துகள் உபயோகிக்கப்பட்டதினால்". அரசர்களின் பெயரிலுள்ள எழுத்துகளுக்கு உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 666 ஆக வரும்போது அவர்களை அந்திகிறிஸ்துக்களாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் சித்தரித்துள்ளனர். நீரோ மன்னனைப் பொறுத்த வரை, லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இவ்வரசனின் கிரேக்கமொழிப் பெயரை எபிரேய மொழியில் **666** வரும் விதத்தில் எழுதியே அவனை அந்திகிறிஸ்துவாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், இது நீரோவை அந்திகிறிஸ்துவாகக் காண்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட விளக்கமாக இருக்கின்றதே தவிர, வெளிப்படுத்தல் புத்தகத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள **அந்திகிறிஸ்து நீரோ அல்ல.** ஏனெனில், நீரோ மன்னனின் கிரேக்க மொழிப் பெயரை வித்தியாசமான முறையில் எபிரேய மொழியில் எழுதி 666ஐக் கொண்டு வருவது சரியான வேதவிளக்கமுறை அல்ல. வழக்கமாக எபிரேய மொழியில் நீரோவின் பெயர் எழுதப்படும் முறையில் அவனுடைய பெயரின் எழுத்துகளின் இலக்கங்களின் கூட்டுத்தொகை 676 ஆகவே உள்ளது. மேலும் நீரோ அரசனாக இருந்த காலத்தில் எவரும் அவனுடன் இவ்விளக்கத்தைத் தொடர்புபடுத்தவில்லை. அதுமாத்திரமல்ல, ஆதி சபை பிதாக்களில் எவரும் நீரோவை இவ்விளக்கத்துடன் தொடர்புபடுத்தி அவனை அந்திகிறிஸ்துவாகக் குறிப்பிடவில்லை. இதைப்போலவே, ஏனைய ரோம அரசர்களையும் அந்திகிறிஸ்துக்களாகக் காண்பிப்பதற்கு 666ஐ அவர்களுடைய பெயர்களுக்குள் சில வேத ஆராய்ச்சியாளர்கள் புகுத்தியுள்ளனர்.

சிலர் **"கலிகுலர்"** என்னும் ரோம அரசனை அந்திகிறிஸ்துவாகக் காண்பிப்பதற்காக 666ஐ 616 ஆகவும் மாற்றியுள்ளனர். இதனால் தான் வேதாகமத்தின் சில பழைய கையெழுத்துப் பிரதிகளில் மிருகத்தின் இலக்கம் 616 என்று மாற்றப்பட்டுள்ளது. ஆனால், அந்திகிறிஸ்து ஏற்கனவே இருந்த ரோம இராட்சியத்தின் அரசர்கள் அல்ல என்பதனால் இவர்களுடைய விளக்கங்கள் வேதத்தை மாற்றி, அல்லது ரோம அரசர்களின் பெயரின் உச்சரிப்பு முறையை மாற்றி, அல்லது இன்னுமொரு மொழியில் எழுதி உருவாக்கப்பட்டுள்ள தவறான விளக்கங்களாகவே உள்ளன.

இதைப்போலவே சபை சீர்திருத்த காலத்தில் **போப்பாண்டவர்களின்** பெயர்களிலும் தவறான முறைகளில் இவ்விளக்கம் புகுத்தப்பட்டது. மிருகத்தின் இலக்கமான 666 எதிர்கால உலக ஆட்சியாளனான அந்திகிறிஸ்துவின் அடையாளமாக இருப்பதனால் இதைக் கடந்த காலத்தில் இருந்த அரசர்களினதோ, போப்பாண்டவர்களினதோ இல்லையென்றால் தற்காலத்தில் இருக்கும் ஆட்சியாளர்களினதோ இலக்கமாக விளக்க முடியாது".

தற்காலத்தில் சில கிறிஸ்தவர்கள் இணையதளத்தின் (இன்டர்நெட்டின்) முகவரியான www என்பதை 666 என்று கூறுகின்றனர்.

எபிரேய மொழியில் ஆறாவது எழுத்து, **"வவ்"** என்னும் ஓசையுடன் இருப்பதனால் இதை ஆங்கிலத்தில் w என்னும் எழுத்துடன் தொடர்புபடுத்தி மூன்று தடவைகள் இவ்வெழுத்தைக் குறிப்பிடும் போது அது www என்று வருவதனால், தற்காலத்தில் இவ்விதமாகக் குறிப்பிடப்படும் இணையதள முகவரியின் ஆரம்ப எழுத்துகளே **அந்திகிறிஸ்துவின் அடையாளம்** என்று கூறுகின்றனர். இது உண்மை என்றால் இப்போதே அந்திகிருஸ்து உலகத்திலிருந்து ஆட்சி செய்கின்றான் என்றும், உணவுப்பொருள் விநியோகத்தை இதன் மூலம் **தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ்** வைத்திருக்கிறான் என்றும் கூறவேண்டும்.

ஏனெனில், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு 666 என்னும் முத்திரை போடப்படுவதன் காரணம், அவர்கள் அன்றாட உணவுப் பொருட்களை வாங்குவதையும் விற்பதையும் கட்டுப்படுத்துவதாகும். ஆனால் இணையதளம் இத்தகைய

வேலையைச் செய்வதில்லை. உண்மையில், எபிரேய அரிச்சுவடியின் ஆறாவது எழுத்தை "வவ்" என்று உச்சரித்தாலும் அதற்கு இணையான ஆங்கில எழுத்து W அல்ல V ஆகும். எனவே, இதை எவ்வித்திலும் இணையதளத்துடன் தொடர்புபடுத்த முடியாது. மேலும், கிரேக்க மொழியில் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் புத்தகத்தின் இலக்கத்தைப் புரிந்து கொள்ள எபிரேய மற்றும் ஆங்கில மொழி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு விளக்குவது சரியான செயல்முறை அல்ல.

அந்திகிறிஸ்துவின் அடையாளமாக உள்ள 666 மனிதர்களினால் புரிந்துகொள்ள முடியாத மர்மமான இலக்கம் அல்ல. இந்த இலக்கம் யாருடையது என்பதை மனித அறிவினால் கண்டுபிடிக்க முடியும் என்றே வெளிப்படுத்தல் 13 : 18ல் குறிப்படப்பட்டுள்ளது. இதனால் தான், **"இதிலே ஞானம் விளங்கும்"** என்றும், "அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன்" என்றும் இவ்வசனம் கூறுகிறது. அதாவது, இந்த இலக்கத்தைப் பற்றி அறிவுப்பூர்வமாக சிந்திக்கும் போது இதைப்பற்றி அறிந்து கொள்ளலாம் என்றே இவ்வசனம் கூறுகிறது. மேலும், இது மனிதனுடைய இலக்கத்தை குறிப்பிடும் இலக்கமாய் உள்ளது. அந்திகிறிஸ்து **தன்னை தெய்வமாகக்** காண்பித்தாலும் **அவன் ஒரு மனிதன்** என்பதை அவனுடைய இலக்கம் சுட்டிக்காட்டுகிறது. உண்மையில், அந்திகிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக் கொண்டு அவனை வழிபடுபவர்களே அவனுடைய முத்திரையைத் தரித்துக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் அம்முத்திரையின் இலக்கத்தைப் பற்றி அறிவுப்பூர்வமாகச் சிந்தித்துப் பார்த்தால் அந்திகிறிஸ்து தெய்வம் அல்ல அவன் மனிதன் என்பதை அறிந்து கொள்வார்கள். இதனால் தான் "**அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன்** கணக்குப் பார்க்கக்கடவன், அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது" என்று 18ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்களுடைய மொழிவழக்கில் 6 மனிதருடைய இலக்கம் என்றால் அந்திகிறிஸ்துவின் முத்திரையாக இவ்விலக்கம் **மூன்று தடவைகள்** எதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாம் கேட்கலாம்.

யூதர்களுடைய மொழி வழக்கில் ஒரு காரியத்தை வலியுறுத்திச் சொல்வதற்கு அதை **இரண்டு அல்லது மூன்று** தடவைகள் சொல்வது வழக்கம். உதாரணத்திற்குத் தேவன் பரிசுத்தர் என்பதை வலியுறுத்திச் சொல்வதற்கு, அவர் **"பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்"** என்று மூன்று தடவைகள் சொல்வதை ஏசாயாவின் தரிசனத்தில் நாம் பார்க்கலாம் (ஏசா.6:3) இதைப் போலவே, இயேசு கிறிஸ்துவின் கூற்றுகளில் **"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்"** என்னும் வாக்கியம் பல தடவைகள் உள்ளது. எனவே, அந்திகிறிஸ்து தன்னை எந்த அளவுக்கு தெய்வமாகக் காண்பித்தாலும் அவன் **மனிதனே** என்பதை வலியுறுத்திக் காண்பிக்கும் விதத்தில் மனிதனைக் குறிப்பிடும் 6 என்னும் இலக்கம் **மூன்று தடவைகள் அவனுடைய முத்திரையில் உள்ளது.**

குறிப்பு : **இவர் எழுதிய இந்த குறிப்பிட்ட புஸ்தகத்தின் விவரங்களையும் இவரின் மற்ற புஸ்தக விவரங்களையும் கீழ்காணும் இவர் குடியிருக்கும் லண்டன் தொலைபேசி மூலம் விவரம் கேட்டறியலாம்.**

**Dr. வசந்தகுமார்**

தொலைபேசி எண்.: 0044-7814252077 London - U.K.

# இரங்கல் அறிவிப்பு:



தமிழ்நாட்டின் முதல்வர் **ஜெ.ஜெயலலிதா** அவர்கள் காலமானார். முதல்வரின் மரணத்துக்கு ஜாமக்காரன் வசாகர்கள் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டையே தன் ஒரு வார்த்தையில் அடக்கி ஆட்சி நடத்தியவர். நல்ல நிர்வாகியாக ஏழை எளியவர்களுக்கு **ஒரு ரூபாய்க்கு** இட்லி, 5 ரூபாய்க்கு **சாப்பாடு** என்ற **அம்மா உணவகம்** போன்ற ஏற்பாடுகளை இந்தியாவின் அனைத்து மாநில முதல்வர்களும் நேரில்வந்து கண்டு ஆச்சரியப்பட்டு அவைகளை தங்கள் மாநிலத்திலும் நடைமுறைப்படுத்த திட்டமிட்டது. இது முதல்வர் ஜெயலலிதா அவர்களின் **தனி திறமைக்கு** நல்ல முன்மாதிரியாகும்.

அவரின் மரணம் அமைச்சர்களையும்,கட்சிநிர்வாகிகள்,வட்டம்,மாவட்டம் ஆகியவர்களை கதறிகதறி அழவைத்தது. ஆனால் அந்த அழுகைகள் யாவும் சுய ஆதாயத்துக்கான அழுகையாகும்.

ஆனால் ஏழைகளுக்கு திருமணத்துக்கு **தங்கம்- திருமண செலவுக்கான பணம், படிக்கும்** பிள்ளைகளுக்கு **இலவச கணணி, சைக்கிள் போன்ற** உதவிகள், வீட்டில் சமைக்காமல் தினசரி **அம்மா உணவகம்** சென்று சாப்பிட்டு திருப்தியடைந்து நன்மைகளை பெற்றவர்கள் அழுத அழுகைதான் **உண்மையான அழுகையாகும்.**

## அவரின் பலவீனம்:

எல்லா அமைச்சர்களையும் எம்பி,எம்எல்ஏ ஆகிய யாவரையும் **காலில் விழுந்து** வணங்குவது, முதல்வர் சென்ற காரின் டையர்களை **தொட்டு வணங்கியது** இவை யாவும் அவரின் **ஆணவத்தின்** அடையாளம்.

முதல்வர் போகும்போது மந்திரிமார் ட மாதிரிதன் உடலை வளைந்து நிற்கும் புகைப்படத்தை,கேரளா,வடஇந்திய பத்திரிக்கைகளிலும் வடஇந்திய டிவி சேனலிலும் காண்பித்து இதுதான் **தமிழ்நாட்டு மந்திரிகளின் நிலைமை** என்று எழுதியது. தமிழர்களுக்கு **பெரும் தலைக்குனிவை** உண்டாக்கியதை இந்த நேரத்தில் கூறாமல் இருக்கமுடியவில்லை.

## அஇஅதிமுகயின் பொதுசெயலாளராக போகும் சசிகலா:

முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் ஜெயலலிதா அவர்களுக்கு பண விஷயத்தில் சொத்து விஷயத்தில் கெட்டபெயர் உண்டாக மூலக் காரணமாக இருந்தவரும், ஜெயலலிதா பெயரைப் பயன்படுத்தி **பில்லியன் கணக்கில்** சொத்துகளை சேர்த்தார்கள் சசிகலாவின் குடும்பத்தினர்.

**சசிகலா** அவர்கள் மந்திரி பதவி,எம்எல்ஏ,எம்பி பதவிகளை நாடாமல் கட்சியின் **பொது செயலர்** பதவி பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக கேள்விப்பட்டேன். பொது செயலர் பதவி முதல்வர் பதவியைவிட சக்தி வாய்ந்தது.

**காங்கிரஸ் கட்சியின்** தலைவியாக பதவி வகித்த திருமதி.**சோனியாகாந்தி** அவர்களைப்போல காங்கிரஸ் கட்சி ஆட்சியின் நிர்வாகத்தில் சகல **மந்திரிகள்,ஜனாதிபதி முதல் பிரதமர்** வரை சகலரையும் ஆட்டி படைக்கும் சக்தியாக திருமதி.சோனியகாந்தி அவர்கள் பொது செயலரின் பதவியில் இருந்துகொண்டு செயல்பட்டதுபோல செயல்பட **சசிகலா** அவர்களும் முயலுவார்கள்.

தமிழகத்தின் புதிய முதல்வர் திரு.**பன்னீர்செல்வம்** அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.



முதல்வர் பதவி ஏற்றெடுத்தாலும் முதல்வர்.ஜெயலலிதா இருக்கும்போது எப்படி முதல்வரின் **டம்மியாக கைபாவையாக** செயல்பட்டாரோ அதைப்போல இப்போதும் **சசிகலா** அவர்கள் இட்ட கட்டளையின்படிதான் முதல்வர் அவர்கள் செயல்படுவார் என்றுதான் நினைத்தார்கள்

**முதல்வரின் புதிய மாற்றம்**

இந்த ஜாமக்காரனை டிசம்பர் 22ம் தேதி எழுதிக்கொண்டிருக்கிறேன். இந்த தேதியில் முதல்வர் அவர்கள் தன்னிச்சையாக **சசிகலாவிடம்** ஆலோசனை பெறாமல் அனைத்து மந்திரிகளையும் அழைத்து அம்மா மறைவுக்குபின் உள்ள இறங்கல் கூட்டங்களுக்கு ஊர் ஊராக மந்திரிகள் சென்றபோது மலைபோல் குவிந்து கிடக்கும் அனைத்து பைல்களுக்கும் முடிவெடுத்து அனைத்து அனைத்து பைல்களும் ஒரு வாரத்தில் முதல்வராகிய என் மேஜைக்கு வரவேண்டும். சென்னையில் 10 நாட்களுக்குள் மின்சார விநியோகம் சீர் அடைய அந்த துறை போர்கால நவடிக்கை எடுக்கவேண்டும். புயலால் வெட்டி குவிக்கப்பட்ட மரங்கள் அப்புரப்படுத்தி மக்கள் போக்கு வரத்துக்கு வழி உண்டாக்க வேண்டும். தண்ணீர் தட்டுபாடு எங்கெங்கோ அங்கு நிலைமை சீர்படுத்த வேண்டும். அம்மாவுக்கு கெட்டபெயர் உண்டாக்காமல் இருக்க என்னோடு ஒத்துழையுங்கள் மிக கண்டிப்புடன் மந்திரிகளுக்கு அந்தந்த துரை செயலாளர்களுக்கும் கட்டளையிட்டது அனைத்து தமிழ் மக்களின் கவனத்தை முதல்வர் பன்னீர்செல்வம் தன்பக்கம் திருப்பியிர்ப்பது நல்ல செய்தியாகும். இனி தமிழ்நாட்டு நிலைமை எப்படியிருக்கும் என்று வரும் நாட்களில்தான் அறியமுடியும்.

தமிழ்நாட்டு கிறிஸ்வர்கள் **தமிழகத்தில் நல்லாட்சி** மலர ஜெபம் ஏறெடுக்கவேண்டியது மிக அவசியம்.

**வாழ்த்துகிறோம்:**

தமிழ்நாட்டு **உயர்போலீஸ் அதிகாரிகள்,** குறிப்பாக போலீஸ் கமிஷனர் திரு.**ஜார்ஜ்** அவர்களின் அருமையான முன்ஏற்பாடுகளும் அவரோடு முழு ஒத்துழைப்பு கொடுத்த **காவல்துறை** அதிகாரிகள், **காவலர்கள்** ஆகியவர்களை **பாராட்டாமல்** இருக்கமுடியாது. இவர்கள் யாவரும் வாரக்கணக்கில் உறங்காமல் **கண்விழித்து வீட்டுக்கும்போகாமல்** அப்போல்லோ மருத்துவமனையிலிருந்த முதல்வரை அடக்கம் செய்யும்வரை உழைத்தது **சாதாரண உழைப்பு** அல்ல! அது தியாகம் ஆகும்.

இத்தனை லட்சோப லட்ச மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து சென்னை வந்து கூடிய கூட்டத்திலும் **ஊர்வல** கூட்டத்திலும் **ஒரு சிறு கலவரமும்** நிகழாமல் சட்டம் ஒழுங்கு நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டு காவல்துறையில் உள்ள அத்தனை பேர்களுக்கும் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்றி கூறியாகவேண்டும். குறிப்பாக சென்னை மாநகர மக்கள் நன்றி கூறியாகவேண்டும்.

அப்பெரும் கூட்டத்தில் ஒரு சிறு அசம்பாவிதம் நேரிடடிருந்தாலும் சென்னை நகரம் முழுவதும் **கலவர காடாகிபோயிருக்கும்.** ஆயிரக்கணக்கான மக்கள் மரித்துபோயிருப்பார்கள்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரு மாதத்துக்கு முன்பே இரகசியமாக ரௌடிகளை,அடியாட்களின் தலைவர்களையும் அவர்கள் ஆட்களையும் **கட்சி வித்தியாசம் பாராமல்** சத்தமில்லாமல், அவர்களை காவலில் வைத்தது. **பத்திரிக்கைக்காரர்கள்** தவறாக ஏதும் எழுதிவிடாமல் இருக்க அவர்களையம் அடக்கிவைத்தது அற்புதமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளாகும். காவல்துறையினர் அனைவருக்கும் ஜாமக்காரன் சார்பில் எங்கள் நன்றியையும்,வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி.

# துக்ளக் சோ.ராமசாமி மரணம்:




துக்ளக் வார பத்திரிக்கையின் ஆசிரியரும்,வக்கீலும்,அரசியல்,கிரிகெட் ஆகியவற்றின் திறமையான விமர்சகருமான **இவர்,** அரசியல் நாடக நடிகரும், சினிமாவில் காமெடி நடிகருமாக சகல துறையிலும் மிக சிறந்த தாலந்து பெற்றவருமான திரு.சோ அவர்கள் மரித்தது பத்திரிக்கை உலகில் குறிப்பாக அரசியல் உலகில் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். அரசியல் தலைவர்கள், பதவியில் இருக்கும் ஜனாதிபதி,பிரதமர் முதல் முதலைமச்சர்,மந்திரிகள்வரை,ஆளும் கட்சி,எதிர்கட்சி, ஆன்மீக வாதிகள் போன்ற ஒருவரையும் இவர் விட்டுவைக்காமல் அவர்களின் தவறுகளை தனக்கே உரிதான நையாண்டி(கிண்டல்-நக்கல்) முறையில் மிக தைரியமாக விமர்சித்து அனைத்து அரசியல்வாதிகளுக்கும் துக்ளக் சோ அவர்கள் சிம்ம சொப்பனமாக விளங்கினார். அதே சமயத்தில் இவர் தன்னைதானே நையாண்டி முறையில் **தன்னையே ஒரு கழுதையாக** கேலி சித்திரம் வரைந்து விமர்சிக்கும் வித்தியாசமான திறமையுள்ளவர்.

ஜாமக்காரன் பத்திரிக்கையில் நான் எழுதும் விமர்சன முறையும் திரு.சோவை என் ரோல்மாடலாக என்னில் உள்ளடக்கி பின்பற்றி எழுதி விமர்ச்சிக்கிறேன். சோ ஒரு ஆர்.எஸ்.எஸ் இயக்க இந்துமத தீவிரவாத வைராக்கியம் கொண்டவராகும். அதையும் நான் எனக்கு மாதிரியாக்கி உயிருள்ள என் தெய்வமாகிய **கிறிஸ்துவைப்பற்றி** எழுத்து ஊழியத்தை வைராக்கியத்தோடு நடத்திக்கொண்டு வருகிறேன்.

சோவின் மரணத்தை இழப்பாக கருதுகிறேன். சோவை இழந்த துக்ளக் பத்திரிக்கை குழுவினருக்கும், அவரின் பத்திரிக்கை வாசகர்களுக்கும், விசிறிகளுமான அனைவருக்கும் என் இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

சோ அவர்கள் நடத்திய முதல் நாடகத்தில் வரும் கதாநாயகன் பெயர் சோ என்பதாகும். அதையே தன் அடைமொழி பெயராக அவரே வைத்துக்கொண்டார். அந்த பெயரிலேயே தன் துக்ளக் பத்திரிக்கையை நடத்தினார். சில வருடங்களுக்கு முன்பே அரசியல் விமர்சன,**கேள்வி-பதில் பகுதி** ஆகியவற்றுக்கு இரண்டு பேர்களை பயிற்சி கொடுத்து சோ அவர்கள் பெயரில் அந்த இருவரும் கடந்த இரண்டு வருடமாக எழுதி கொண்டு வந்ததால் சோவின் மரணத்துக்குபிறகும் அதே நையாண்டி முறையில் அரசியல் விமர்சனங்களும் கட்டுரைகளும் கேள்வி-பதிலும் வெளிவரும்.

இன்றைய கால கட்டத்தில் அரசியல் **நடுநிலை விமர்சகர்கள்** சோவைபோல எழும்ப வேண்டும். சோவுக்கு இந்து மத வைராக்கியம்,தனக்குள் இருந்தாலும்,மோடி, அத்வானி, RSS,BJP ஆகியவற்றை ஆதரிக்கிறார், அப்படி ஆதாரித்தாலும் அவர்களையும் தாக்குவதைபோல விமர்சித்து தனது **நையாண்டி** விமர்சனத்தின்மூலம் அவர்களையும் அவர்கள் கட்சியை வெறுப்பதைப்போலவும் காட்டிக்கொள்வார்.

பல வருடங்களுக்கு முன் துக்ளக்கில் **மதமாற்று சட்டத்தை** ஆதரித்து அவர் எழுதியபோது நம் தெய்வமாகிய கிறிஸ்துவின் கட்டளையான **சுவிசேஷம் அறிவித்தல்** என்ற கட்டளையை கிறிஸ்தவர்களாகிய நாங்கள் நிறைவேற்றவேண்டும். கடவுளின் கட்டளைக்கு நாங்கள் கீழ்படியவேண்டும் நாங்கள் யாரையும் மதம் மாற்றவில்லை. கிறிஸ்துவை பாவ பரிகாரியாக அறிவிப்பதுதான் எங்கள்மேல் விழுந்த கடமையாகும் என்று நான் நீண்ட கடிதம் அவருக்கு எழுதினேன். நான் எழுதிய அடிப்படையில் தான் **இரத்தசாட்சிகளாய் கிறிஸ்த மிஷனரிகள இந்தியா**வில் மரித்தார்கள். இந்தியாவில் வந்த மிஷனரிகள் கஷ்டப்பட்டு தமிழை கற்று மேலும் இந்திய மொழிகளையும் கற்று இந்திய மக்களுக்கு கல்வி **கற்றுகொடுக்கும் பணியிலும்,மருத்துவ பணியையும் செய்து** நம் **மக்களை முன்னேற்ற பாதையில்** கொண்டுவந்தார்கள். **சோ** அவர்களே தன் பத்திரிக்கையில் எழுதினார்கள். தான் கல்வி பயின்ற பிரசித்திப்பெற்ற **லயோலா கல்லூரி** கிறிஸ்த மிஷனரிகளால் ஸ்தாபிக்கப்பட்டு உலக சிறப்பு அந்தஸ்துக்கு அவர்கள் கல்வி கற்று கொடுத்தார்கள். சோ ஆகிய நான் என் அனுபவத்தில் ஒருநாளும் அவர்கள் மாணவர்களை மதமாற்ற முயற்சிகள் எதையும் மேற்கொண்டதில்லை என்பதை நானே அறிவேன் என்று தன் அறிக்கையில் எழுத்துக்களால் பதிவுசெய்து இருக்கிறார்.

என்றாலும் RSS,BJP கொள்கையையும் இந்து மதத்தைப்பற்றி தான் எழுதிவந்த இந்து மத நூல்களால் பரப்பி வந்தார். **மகாபாரத** விளக்க உரையை வாரவாரம் துக்ளகில் எழுதி வந்தார். இப்படியெல்லாம் RSS கொள்கையை தன்னுள் புதைத்துவைத்து **இந்துமத** சார்பில் தன் கொள்கையை பகிரங்கமாக எழுத்தின்மூலம் வெளிப்படுத்தினார்.

என்றாலும் அரசியல் விஷயங்களில் ஆளும்கட்சி எதிர்கட்சி என்று பாராமல் ஆழமான விமர்சனங்களையம் எழுதி அனைத்து கட்சிகளும் **சுயநலம்** உள்ளவை என்பதையும், அனைத்து கட்சி தலைவர்களும் சுயநலம் உள்ளவர்கள் தான் என்று வெளியரங்கமாக எழுதி மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கினார். அவர் மரணம் பத்திரிக்கை உலகின் பெரிய இழப்பாகும்.

## நெல்லை - தூத்துக்குடி டையோசிஸ் நடத்தும் IMST பிரச்சனைகள்

‘ P.F. Fundல் மிஷனரிகள் பணம் சேர்க்கப்படவில்லை மிஷனரி Fund என்ற பெயரில் தனியாக கணக்குதொடங்கப்பட்டது இதில் உள்ள பணம் எதற்காக செலவிடப்படுகிறது IMSTயில் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு ஊதியமாக P.F. Fund லிருந்து பணம் எடுத்து கொடுக்க முடியாததின் காரணம் என்ன ? IMST என்பது Trust என்ற அமைப்பா? சொசைட்டி என்ற அமைப்பா?

இன்னும் பல கேள்விகளை ஏழை மிஷனரிகள் கேடகிறார்கள் . மிஷனரி ஊழியத்துக்கு பொருப்பாளர்களுக்கு மிக ஆடம்பரமான **மிகவிலைஉயர்ந்த** காரின் அவசியம் என்ன ?

‘ FMPB நண்பர் சுவிசேஷ ஜெப குழுவின் முன்னாள் பொது செயலர் தன் உயர்ந்த பதவிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று தன் வங்கி சேமிப்பு P.F. Fundல் கிடைத்த அத்தனை பணத்தையும் மிஷனரி பணிக்காக அப்படியே கொடுத்துவிட்டு வெரும் கையாக பொதுசெயலர் பதவியை ஏற்றார். அவர் மனைவி நானும் சளைத்தவரல்ல என்று தன் தாலி செயினை அப்படியே மிஷனரி பணிக்கு அர்பணித்தார். - இரண்டையும் ஒப்பிட்டு பாருங்கள்

# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## இல்லந்தோறும் நற்செய்தி சுவிசேஷ கைப்பிரதி ஊழியம்

**கேள்வி:** **இல்லந்தோறும் நற்செய்தி என்ற ஊழியம் இப்போதும் நடைபெறுகிறதா? அந்த ஊழியம் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது என்று கூறுகிறார்களே?**

**பதில்:** *நீங்கள் குறிப்பிட்ட* India Every Home Crusade *இந்திய இல்லந்தோறும் நற்செய்தி என்ற ஊழியம் மிக அருமையான ஊழியம் ஆகும்.*

*இவர்கள்* ***வீடுவீடாய் கிராமங்கள் தோறும்*** *நடந்து சென்று சுவிசேஷ புத்தகங்கள் மட்டும்(பைபிள் அல்ல) விநியோகிப்பதும் மேலும் அவர்களுக்கு* ***சுவிசேஷம் அறிவிப்பதும்*** *இந்த ஊழிய ஸ்தாபனத்தின் கொள்கையாகும்.*

*பல வருடங்களுக்கு முன்பே இந்த ஊழியம் நிறுத்தப்பட்டது. இந்த ஸ்தாபன ஊழியர்கள் சுவிசேஷ புத்தகம் விநியோகிக்கும்போது பல கிராமங்களில் ஊழியர்கள் தாக்கப்பட்டனர். குறிப்பாக* ***வட இந்தியாவிலும்,ஆந்திராவிலும்*** *அப்படிப்பட்ட தாக்குதல் நடைபெற்றது.*

*அதன்பின் ஒரு கட்டத்தில் வெளிநாட்டு உதவிகள் இவர்கள் பெறுவதும் நிறுத்தப்பட்டன. ஊழியர்களுக்கு உதவித் தொகை கொடுக்க முடியாத நிலை வந்தது. இந்த ஊழிய ஸ்தாபனத்துக்காக அன்றைய காலத்தில் ஏராளமான ஊழியர்களை நானே அனுப்பி வைத்திருக்கிறேன். அதன்பின் நிர்வாகத்திலும் சில பிரச்சனைகள் எழும்பினது. அற்புதமான அந்த ஊழியத்தை தடை செய்ய பிசாசு பல வகைகளிலும் முயன்று தற்காலிகமாக வெற்றியும் பெற்றான். ஆனால் அந்த ஊழியத்தின் தேவைகளை உணர்ந்தவர்கள்* ***அந்த ஊழியத்தை புரிந்துக்கொண்டவர்கள்*** *மறுபடியும் இணைந்து பேசி நல்ல முடிவுக்கு வந்தார்கள்.*

*மறுபடியம் நிர்வாக சீர்அமைப்பு உண்டாக்கி அந்த ஊழியம் பெரிய அளவு உயிர்பெற்று எழும்பி இப்போது மறுபடியும் பிரகாசிக்கிறது. இப்போது* ***சுவிசேஷ புத்தகங்கள்,*** *துண்டுபிரதி ஊழியம் மட்டும் செய்து ஆரம்பித்த இந்த ஊழியம் இப்போது ஆங்காங்கு* ***ஆராதனை கூடங்களையும்*** *எழுப்பி சிறப்பான ஊழியம் செய்ய ஆரம்பித்துவிட்டது.*

*இந்த ஊழியத்தை மறுபடியும் ஆரம்பிக்க காரணமானவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. அந்த காலத்தில் இந்த ஊழியத்தின் முக்கியத்துவத்தை அறியாதவர்களும், ஊழிய பாரம் அற்றவர்களும்*

நிர்வாகிகளாக பொருப்பேற்றபின்தான் இந்த ஊழியம் கொஞ்சம்கொஞ்சமாக அழிய காரணமாக இருந்தது. அப்படிப்பட்டவர்களையெல்லாம் தயவுதாட்சன்யம் பாராமல் பொருப்பாளர்கள் அவர்களை வெளியேற்றியவுடன், ஊழிய பாரம் நிறைந்த புதிய நபர்கள் **நிர்வாகிகளாக** பொருப்பேற்றபின் முன்பைவிட மிக சிறப்பாக ஊழியம் இயங்குகிறதாக கேள்விப்பட்டேன். மேலும் இவ்வூழியத்தைப்பற்றியும் இவர்கள் நடத்தும் பத்திரிக்கைப்பற்றியும் அறிய வேண்டுமானால் நீங்கள் தொடர்புக்கொள்ளவேண்டிய முகவரி:

INDIA EVERY HOME CRUSADE
43/20,RITHERDON ROAD, VEPERY, CHENNAI - 6007
Ph: 044-25320087, E-mail:EVERYIN@VSNL.NET

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பாடல்கள்

**கேள்வி: U-TUBEல் டாக்டர்.புஷ்பராஜ்** அவர்களின் பாடல்கள் என்று குறிப்பிட்டால் உங்கள் அனைத்து பாடலும் உங்கள் பிரசங்கங்களையும் யாரோ பதிவுசெய்து ளெவியிடுகிறார்கள். அதில் சிறப்பான பாடலாக **உள்ளம் எல்லாம் உருகுதையோ** என்ற பாடலை எத்தனை முறை வேண்டுமானாலும் கேட்டு ரசிக்கலாம். ஆனால் அந்த பாடல் அருகே **பாலாசீர் லாறி** அவர்களின் மகன் **தேவ் லாறி** அவர்கள் அந்த பாடலை தன் தகப்பானர் எழுதியது என்று எழுதியிருக்கிறாரே நீங்கள் எழுதிய பாடல் என்றுதான் நாங்கள் நினைத்தோம். அது சரியான தகவலா?

**பதில்:** *தம்பி.தேவ் லாறி அவர்கள் அப்படி எழுதியிருந்தால் நூற்றுக்கு நூறு அவர் பொய் பேசுகிறார் என்று தைரியமாக கூறலாம். அந்த பாடலை எழுதியது சென்னை தாம்பரம் பிலடெப்பியா பெந்தேகோகோஸ்தே சபை பாஸ்டரும்,சிறந்த வேத பண்டிதரும், என் இனிய நண்பருமான பாஸ்டர்.பாஸ்கரதாஸன் என்பவராகும்.*

*பாலாசீர் லாரி எப்படி தன்னையே கடவுள் என்றுநான்தான்* **இயேசு,நாராயணன்,அல்லா** *என்று அறிவித்து உலக மகா பொய்யராய் கடைசிகால வாழ்க்கையை நரகத்தில் கழிக்க விழுந்து போனவரானாரோ, அவர் மகன்* **தம்பி தேவ் லாறியும்** *அப்பாவுக்கு தப்பாமல் பிறந்த பொய் பேசும் வல்லுனராகிப்போனது வருத்தமே. இப்போதும் தன் தகப்பனால் மீண்டு வருவார் என்று மக்களை ஏமாற்றி கொண்டிருக்கும் அவர் இப்படி ஒரு பொய் பேசியதில் ஆச்சரியம் இல்லை.*

# பொய் உடைந்தது:

**கேள்வி: மூவரணி(ஏஞ்சல் டிவி சாதுசெல்வராஜ், வின்செண்ட் செல்வகுமார், சகோ.மோகன் சி.லாசரஸ்) மூன்று பேர் அடங்கிய கூட்டணி உடைந்துபோய்விட்டது என்று கூறுகிறார்களே உண்மையா?**

**பதில்:** *மூவரில் ஒருவர் மோகன் சி.லாசரஸ் அவர்கள் கூட்டணியிலிருந்து பிரிந்துவிட்டார் என்றுதான் கேள்விப்பட்டேன் மற்ற இருவர் அப்படியேதான் இணைந்துள்ளார்கள்.*

*மக்களுக்கு வேத ஞானம் இருந்தால் இப்போதாவது சில காரியங்களை விளங்கிக்கொண்டால் நல்லது. சகோ.மோகன்.சி.லாசரஸ் டிவியிலும், தன் பத்திரிக்கையிலும் கூறினார். இவர்களோடு* **இணைவதைக்குறித்து** *சந்தேகப்படாதே! ஊர் மக்கள்* **இவர்களைப்பற்றி** *என்ன புகார்கள் கூறினாலும்,உங்கள் மூவரையும் இணைத்து நான் கூறும் தீர்க்கதரிசனம் மூலமாய் மக்களை ஜாக்கிறதைப்படுத்தப் போகிறேன் என்று* **இயேசு** *என்னிடம்* **நேரில் வந்து** *கூறியபடியால் இவர்களோடு இணைந்தேன் என்று கூறினார்.*

***சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் ஏஞ்சல் டிவியிலிருந்து விலகல்:***

*சகோ.மோகன் சி.லாசரஸ், சகோ.சாதுசெல்வராஜ்,வின்செண்ட் செல்வகுமார் ஆகிய மூவரும் மார்வாடிகள்போல உட்கார்ந்து செய்யும் சம்பாஷனைகளில் மூலம் இந்த மூவரணி வழியாகத்தான் கர்த்தர் மக்களோடு பேசுவேன் என்பதாக தானே சகோ.மோகன் சி.லாசரஸ் கூறினார். அதே இயேசு இப்போது மறுபடியும் மோகன் சி.லாசரஸ்ஸிடம் நேரில்வந்து இவர்களுடையது **பொய் தீர்க்கதரிசனம்** என்று எனக்கே தெரியாமல்போனது. இப்போதுதான் கொஞ்சகொஞ்சமாக எனக்கு விளங்கினது. நீ இவர்களுடன் சேராதே, பணவிஷயத்தில் இவர்கள் **அரசாங்கத்திடம்** அகப்படும்போது நீயும் **அகப்படவேண்டியிருக்கும்.** உன் பிரச்சனையே பெரிய பிரச்சனை ஆகும். இவர்கள் பண விஷயத்தில் **உனக்கு உள்ள பங்கு** சம்பந்தமாக அரசாங்கத்தால் நீ அகப்படும் முன் **விலகிவிடு** என்று சகோ.**மோகன் சி. லாசரஸை** பரலோகத்துக்கு அழைத்து சென்று எச்சரித்திருப்பாரோ? இவர்கள் கூட்டணியின் **உள்இரகசியம்** எதுவும் எனக்கு தெரியாது. எனக்கு வந்த கடிதங்களில் ஏஞ்ஜல் TVயை குறித்தும் பண பரிமாற்றங்கள் குறித்தும் பக்கம்பக்கமாக எழுதியவர்கள் அனுப்பிய **செய்திகளை** வாசித்தபோது அதிர்ந்துபோனேன். பணவிஷயத்தில் இவர்களுக்கு இடையில் மிகப்பெரிய **நெட்ஓர்க்** நடந்துக்கொண்டிருப்பதாக புரளிகள் வந்துகொண்டிருக்கிறது.. அவைகள் உண்மையாக இருக்கக்கூடாதே என்று விரும்புகிறேன். **யாக் 15:16.***

---

எச்சரிக்கை! எச்சரிக்கை !!

## தமிழ் நாட்டில் மிகப்பெரிய மிஷனரி ஸ்தாபனம்

# கசிந்து வரும் செய்திகள்

முன்னால் பொதுசெயலர் நீக்கப்பட்டு நல்ல ஜெபிக்கும் புதிய பொது செயலர் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆனால் வெளிநாட்டில் நடந்த Faith to Share என்ற ஸ்தாபனம் நடத்திய கூட்டத்தின் முடிவில் நம் மிஷனரி ஸ்தாபனத்திலிருந்து வந்தவர்களுக்கு Rs. 46.000 பயண செலவாக கொடுத்தனர். அதை Rev. Simon Ponniah அவர்கள் நான்தான் பொதுச்செயலாளர் என்று கூறி அந்த தொகையை கையெழுத்திட்டு வாங்கிக் கொண்டார். வாங்கிக் கொண்டதில் பிரச்சனையில்லை, ஆனால் அதை சென்னையில உள்ள தலைமை அலுவலகத்தில் அந்த பணத்தை சேர்க்கவில்லை என்பதுதான் வேதனையான விஷயம்.

வெளிநாட்டு செமினார் கூட்டம் நடத்தியவர்கள் தாங்கள் அனுப்பிய பணம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறோம் என்று இன்றைய பொதுச்செயலருக்கு நன்றி கூறி கடிதம் எழுதியபோதுதான் பணம் விவரம் **அறியலாயிற்று.** உடனே இன்றைய பொதுச்செயலாளர் Rev. சுதர்சன தாமஸ் அவர்கள் தான் எந்த பணத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், எந்த ரசீதிலும் கையெழுத்து போடவில்லை என்றும் இமெயில் மூலம் செய்தி அனுப்பினார். உடனே சென்னை நிர்வாக குழுவில் இந்த விவரம் அறிவிக்கப்பட்டு சைன் பொன்னையாவை சஸ்பெண்ட் செய்ய பரிதுரை செய்யப்பட்டது. இந்த அவமானமான நிகழ்ச்சிகள் சைமன் பொன்னையா அவர்களின் பழைய தவறுகளை உறுதிபடுத்திற்று இவரின் பண விசஷயத்தில் இவரின் பலஹீனம் இன்னும மாற வில்லையே என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

### என் நண்பரும் அகப்பட்டார்

அவர் போக்கு - வரவு செலவு கணக்கு ஒப்படைக்கும்போது கணக்கை மிகைப்படுத்தி அவர் கணக்கை சமர்பித்ததாக அறிந்து விசாரனைநடக்கிறது. அவர் அளித்த பதில் கணக்கில் **ஒன்பது என்ற எண்ணை** தெரியாமல் அவசரகோலத்தில் சேர்த்துவிட்டேன். என் கணக்கில் அந்த தொகையை பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர் விளக்கம் கூறியது ஏற்புடையதல்ல.

இவர் ஊழியத்தில் மிகவும் உண்மையுள்ளவர,் இரவு பகல் என்று பாராமல் உழைத்து அனைத்து மிஷனரி பணிகளுக்கும் இவர் மூலமாக கிடைத்த உதவிதொகை மிக ஏராளம். நல்ல ஜெப வாழ்க்கையும் ஊழியத்தில் நூற்றுக்கு நூறு உண்மையுள்ளவர் என்ற பெயர் இவருக்கு இருந்தாலும் ஒரு சிறு கவணக்குறைவு **ஒன்பது என்ற எண்ணை** கூடுதலாக எழுதி, அவசரகோலத்தில் கணக்கு காட்டியது இதுவரை அவர் ஊழியத்தில் அவர்பட்ட கஷ்டங்கள் பாடுகள் அனைத்தையும் மக்கள் பார்வையில் **சைபர்** என்று ஆகிவிட்டதே! என்றாலும் நிச்சயம் தேவன் அவரை கனப்படுத்துவார். இந்த பண விஷயத்தில் அவர் வேண்டுமென்று செய்ததாகக் கருதவில்லை. ஊழியர்கள், மிஷனரிகள், மிஷனரிதலைவர்கள் யாராக இருந்தாலும் பண விஷயத்தில் யாரும் தங்களை குற்றம் சொல்லாதபடி மிக எச்சரிக்கையுடன் சரியான கணக்கை ஆத்திரம் இல்லாமல், **அவசரமில்லாமல்** சமர்ப்பிப்பது எத்தனை அவசியம். அவர் மிஷனரி பணியில் அவர் செய்த தியாகம் இழப்பு அலைச்சல் அனுபவம் ஜெப வாழ்க்கை யாவையும் கணக்கில்கொண்டு குற்றசாட்டை **மறுபரிசிலனை** செய்வது மிஷனரி ஊழிய ஸ்தாபனத்துக்கு நல்லது. மிஷனரி பணியில் முதிர்ச்சிபெற்ற அனுபவம் வாய்ந்த, உண்மையுள்ள ஊழியரை ஸதாபனம் இழந்துவிடக்கூடாது. யானைக்கும் அடி சருக்கும் என்பதற்கு இது உதாரணம்.

# இறந்துபோனவர்களிடம் ஆசீர்வாதம் எதிர்ப்பார்க்கும் பிஷப். S.T.நோவா

(பத்திரிக்கையாளர் - **அணைக்கும் கரங்கள்** - ஆகஸ்ட் 2016)

மரித்த சகோ.**DGS.தினகரன்** அவர்களுக்கு உலகமக்கள் செத்துப்போனவர்களை வருடாவருடம் நினைவு கூர்ந்து தினசரி செய்திதாள்களில் ஒருபக்க அஞ்சலி விளம்பரம் செய்வதுபோல் இவரும் ஒரு பக்க கவிதாஞ்சலி எழுதியுள்ளார்.

அதில் சகோ.தினகரன் அப்போஸ்தலனாக கர்த்தரே அவரை அனுப்பினார் என்று வர்ணித்து கவிதையின் கடைசியில் ஜெபவேண்டுகோளை வைத்துள்ளார்.

**பரலோகத்தில் இவருக்கும் சகோ.தினகரன் அவர்களே எங்கள் சிறை ஊழியங்களுக்காக வேண்டிக்கொள்ளும் இந்த ஊழியத்தை யார் தாங்குகிறார்களோ அவர்களை பரலோகத்திலிருந்தபடியே நீங்கள் ஜெபித்தால் போதும். அப்போது எங்கள் ஊழியம் மேலும் வளரும்.**

இப்படி **பேராயர்.டாக்டர்.நோவா** என்று எழுதியுள்ளார். வேத வசனத்தில் தேறிய ஒரு நல்ல ஊழியர் சகோ.தினகரனின் ரசிகர்களின் **ஆதரவை பெற** இப்படி ஒரு வழி கண்டுபிடித்தது மனவேதனையை தருகிறது.

இவர் ஆரம்ப ஊழியத்தை நான் அறிவேன். கொஞ்சமாக ஆரம்பித்த ஊழியம் இவரின் அருமையான சிறை ஊழியத்தினால் கர்த்தரே இவரை ஆசீர்வதித்து ஊழியத்தையும் உயர்த்தி அரசாங்கமே பாராட்டும் அளவு இவரை உயர்த்தி ஊழியத்தின் உச்சியில் கர்த்தர் நிறுத்தினார்.

ஆனால் இப்போது செத்தவர்களின் ஜெபம் இப்போது தேவையாகிபோனது வருந்ததக்கதாகும். வசனத்தைவிட்டுவிலகி மெல்ல **கத்தோலிக்க உபதேசத்துக்கு** நுழைந்ததைப்போல் செத்துப்போன **கன்னிமாரிளே,அந்தோணியாரே,அல்போன்சாவே** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று ஜெபிக்கும் அறியாமை உள்ளவர்களின் உபதேசத்துக்குள் நுழைந்துவிட்டாரே.

ஆண்டவர் இப்போதும் இவருக்கு ஒரு குறையும் வைக்கவில்லையே? MGR ரசிகர்கள்,NTR ரசிகர்கள், நடிகை.குஷ்புக்கு கோவில் கட்டியவர்கள் இப்போதும் சூடம் பொருத்தி வேண்டிக்கொள்வதுபோல் **டாக்டர்.நோவா** (சிறை ஊழியர்) மாறியது வேத வசன விசுவாச துரோகமாக கருதுகிறேன். நல்ல ஊழியர்கள் இப்படி கடைசி காலங்களில்

வசனத்தைவிட்டு விலகிப்போவது கிறிஸ்தவ ஊழியங்களுக்கு சாட்சியுள்ளதல்ல.

அவர் எழுதியுள்ள கவிதையை அடுத்த பக்கத்தில் உள்ளது பாருங்கள்.

வரலாற்றின் நாயகனே ! பொன்னெதிர் நிறத்தோனே !
பூங்குயில் குரலோனே ! பண்பாட்டின் பகலவனே !
“இயேசு அழைக்கிறார்” என்ற நல்லதொரு ஊழியத்தை
தனியொரு மனிதனாக விதைத்துவிட்டாய் !. இவ்வுலகில்
ஆயிரத்து தொள்ளாயிருத்து முப்பத்தைந்தாம் ஆண்டு
ஜூலைத் திங்கள் முதலாம் நாள் நீ உதித்தாய்!
இல்லை ! இல்லை !. நீ அனுப்பப்பட்டாய்
பல்லாயிரக்கணக்கான நொறுங்குண்டு நருங்குண்டுபோன
உள்ளங்களுக்கு ஆறுதல் தர.
கவவுக்கை நெகிழாமல் காலமெல்லாம் உன்னோடு
துன்பத்தில் பங்குகொண்ட சகோதரி ஸ்டெல்லா !
பதினெட்டாம் அகவையில் ஊழியத்தில் உனக்கு
தோள்கொடுத்த தம்பி பால் !
அவர் மனைவி இவாஞ்சலின் அன்பு, மக்கள் மூவர் பல்லாண்டு வாழ்ந்து பார்புகழ திகழட்டும்
ஆரம்ப காலத்தில் சிறையருட்பணியில் நான் சோர்வுற்ற போதெல்லாம்
என்னை ஆற்றித் தேற்றி என் நடுக்கத்தைப் போக்கியவனே !
உன் நூல்களை நான் திருத்தவும், லட்சக்கணக்கான
மக்கள் கூடும் உன் மேடையில் என்னை
தலைமை தாங்க பணித்ததும் உன் அன்பின் முதிர்வல்லவா?
வளர்ந்து வரும் சிறையருட்பணிக்காக பெருகிவரும்
ஆத்துமாக்களுக்காக, உதவிக் கரங்களை நீட்டும்
நல்ல உள்ளங்களுக்காக நீ பரலோகத்திலிருந்தே
ஜெபித்துக் கொண்டிரு!. அதுபோதும் எங்கள் ஊழியம் மேலும் வளர !

பேராயர் டாக்டர். **S.T. நோவா** சிறையருட்பணியாளன்

# 2016 நவம்பர் ஜாமக்காரன்

2016 நவம்பர் ஜாமக்காரன் இன்டர்நெட்டில் வராது. நவம்பர் ஜாமக்காரன் தேவை என்றால் அதைபுஸ்தமாக உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

# வேதாகமத்தில்



From The Complete Bible Story Clip Art Book. ©Gospel Light. Used by permission.



# மனைவியின் ஸ்தானம்

Selected

மனைவியானவள் கணவனுடன் இணைந்து கர்த்தருக்கென்று செயல்பட தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரம்(ஆதி 2:18). மனைவி கணவனுக்கு **ஏற்ற துணையாக** இருக்கும்படி அழைக்கப்பட்டவள். கர்த்தருக்கு மகிமையாக செயல்பட ஒரு மனுஷக்கு ஏற்ற **துணை** தேவை. ஏவாளுக்குக் **கர்த்தரால் கொடுக்கப்பட்ட கட்டளை** இது. தீய செயல்களில் கணவனுக்குத் துணையாகவோ,ஒத்துப்போகவோகூடாது. அவ்வாறு செயல்பட்ட **ஆகாபின்** மனைவி **யேசபேல்** கர்த்தரால் தண்டிக்கப்பட்டாள். **ஆவிக்குரிய காரியங்களில்** கர்த்தருக்குப் பயந்து கணவனை ஊக்குவித்து செயல்பட மனைவி தேவை. கணவனுக்கு நல்ல ஆலோசனைகளைக் கொடுத்து வாழ்க்கை நடத்துவதிலும்,ஊழியத்திலும் ஆர்வம் காண்பித்து கணவனுடன் ஒத்துழைத்து செயல்படும் மனைவியே **ஏற்ற துணை எனப்படுவாள்**. கணவன், மனைவி இருவரும் ஆவிக்குரியவர்களாக இருந்தால் அவர்கள் எந்த காரியத்திலும் ஒன்றாக இணைந்து கர்த்தருக்கென்று பிள்ளைகளை வளர்த்துகொடுத்து தேவனை மகிமைப்படுத்து கிறார்கள். எத்தனை வாலிபர்,மிஷனரிமார்,தேவ பக்தியுள்ள **தாயின் கண்ணீருள்ள** ஊக்கமான ஜெபத்தினால் இரட்சிக்கப்பட்டு **தேவ ஊழியரானர்கள்** என்பதையும் நாம் அறிவோம். இதில் கணவனின் ஒத்துழைப்பும் அடங்கியிருக்கிறது. எத்தனையோ சபைகள் கணவன் -மனைவியின் ஒத்துழைப்பு,ஜெபம்,விடாமுயற்சி காரணமாக ஸ்திரப்பட்டு பெலப்பட்டு வளர்ந்து ஸ்தாபிக்கப்பட்டு இருந்திருக்கிறது. இவையாவற்றிலும் **மனைவியின் அமைதியான** எதிர்த்து பேசாத, **முறுமுறுக்காத பங்கு** ஒரு முக்கிய இடத்தைப்பெறுகிறது.

புதிய ஏற்பாட்டில் **ஆக்கில்லா,பிரிஸ்கில்லா** இதற்கு ஒரு நல்ல முன்உதாரணமாக நம் கண்கள் முன்பு வைக்கப்பட்டிருக்கின்றனர். வேதாகமத்தில் இந்த **இருவரின்** பெயர்களும் ஆறுமுறை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆறு இடங்களிலும் இந்த இருவரின் பெயர்களும் ஒன்றாகவே இணைந்து காணப்படுவதினால், அவர்கள் **பிரிக்கமுடியாத தம்பதிகளாக** இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவோம்.

இதில் மூன்றுமுறை **பிரிஸ்கில்லாவின்** பெயர் கணவனின் பெயருக்கு முன்னால் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அவளுடைய பங்கு ஊழியத்தில் அதிகமாக இருந்திருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. என்றாலும் இணைப்பிரியாத இந்த தம்பதிகள் நெருங்கிய,ஏகமனதுடன் செயல்பட்டவர்களாய் காணப்படுகிறார்கள். (Close,compatible relationship) எனவே **பிரிஸ்கில்லா** என்கிற மனைவியின் வாழ்க்கையில் காணப்பட்ட அரும்பெரும் குணங்களைச் சிந்திப்பது நலம். மூன்று விதங்களில் பிரிஸ்கில்லாவின் கணவனுடன் இணைந்து செயல்பட்ட ஊழியம் விசேஷமானது.

## 1). தேவபக்தியுடன் கணவனுடன் இணைந்த குடும்ப ஜீவியம்: நீதி 19:14,18:22:

**வேதம் கூறுகிறது** வெற்றியுள்ள வாழ்க்கையின் ஆரம்பம் **தேவபயம்** ஆகும். அதாவது மகிமையின் தேவனையும் அவர் வார்த்தையையும் மதித்து நடக்கும்போது அது நம் வாழ்க்கையை எல்லா நிலையிலும் பாதிக்கிறது. அப்படிப்பட்ட பெண்ணாக இருக்கவேண்டுமானால் இதை வாசிக்கும் மனைவி ஸ்தானத்தில் உள்ள உன் வாழ்க்கையில் **சரியான முன்னுரிமை**(Right priorities) கொடுக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

ஒரு பெண்ணுக்குத் தேவனுக்கு கொடுக்கும் முன்னுரிமை(God's priorities for a women) என்பது தனிப்பட்ட விதத்தில் தேவனோடு நெருங்கிய செழிப்பான ஐக்கியம்(மத் 6:33) என்று கருதப்படும்.

**ஆவிக்குரிய மனைவி என்பவள் கணவனுக்குப் பணிவிடை செய்வது(நீதி 19:14,31:12)**

**பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்ப்பது(2 தீமோ 1:5)**

**வீட்டை நடத்துவது(தீத்து 2:5)**

**கர்த்தர் கொடுக்கும் நேரத்தை நற்கிரியைகள் செய்வதில் ஈடுப்படுத்துவது** என்பது முக்கிய பணியாகும். அவளே குணசாலியான பெண் என்று வேதம் புகழுகிறது.(நீதி 31:10-31).

**குணசாலியான ஸ்தீரி** என்று வேதம் விளக்குவது மனைவியானவளின் உள்ளத்தின் ஆழத்தில் அவள் கர்த்தர்பேரில் வைத்திருக்கும் மேலான அன்பினால் ஏவப்பட்டு செயல்களில் தன் சாட்சியுள்ள காண்பிக்கும் ஸ்தீரியாக காணப்படுவாள். பிரிசில்லாவைப் பார்க்கும்போது இவ்வாறு தெய்வபயம் பெற்று தன் கடமைகளை நிறைவேற்றினாள். **ரோமாபுரியிலிருந்து ராயனின் கட்டளைப்படி** குடியிருந்த சொந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்டு கஷ்டமான பிரயாணத்தை மேற்கொண்டு கணவனோடு சேர்ந்து **கொரிந்து** பட்டணத்தில் வந்து குடியேறினார்கள். புதிய இடம்,புதிய சூழ்நிலையில் கணவனோடு இணைந்து **கூடாரத் தொழிலில் ஈடுபட்டு** தங்கள் காலத்தைக் கழித்தனர்.

**பவுலோடு** ஆவிக்குரிய ஊழியத்தில் இணைந்து **எபேசு** பட்டணத்திற்குச் சென்றனர். அங்கேயும் கர்த்தர் அவர்களை பயன்படுத்தினார். **பவுலுக்காக** பிராணனையும் கொடுக்க துணிந்தனர். இந்த எல்லா கசப்பான அனுபவங்களின் மூலமாக கணவனும்,மனைவியும் முறுமுறுக்காமல் **ஆவிக்குரிய பாடங்களைக்** கற்றுக்கொண்டனர். இந்த எல்லா கஷ்டங்களையும் **பிரிசில்லா பொறுமையோடு சகித்து** எவ்வித முறுமுறுப்புமில்லாமல் கணவனோடு இணைந்து பாடுகளை அனுபவித்தாள். **மரண பரியந்தம் கணவனுக்கு உண்மையாய்** இருந்தாள்.

இறுதியில் கிறிஸ்துவைப் பற்றிய சாட்சிக்காக இருவரும் **இரத்தசாட்சிகளாய்** மரித்ததாக வரலாறு கூறுகிறது. வாழ்நாள் முழுவதும் இணைப்பிரியாத வாழ்க்கை. மரணத்திலும்கூட இருவரும் பிரியவில்லை. **ரோமாபுரியின்** கல்வெட்டுகளிலும் அவளின் பெயர் பதிக்கப்பட்டிருக்கிறது என்பது அவளது ஆவிக்குரிய செல்வாக்கைக் காட்டுகிறது.

## 2). கணவனும்,மனைவியும் இணைந்து செயல்பட்ட ஊழியம்(Team Ministry) அப் 18,ரோம 16:3-5).

**யூதரெல்லாரும் ரோமாபுரியைவிட்டுப்** போகும்படி கிலவுதியராயனால் கட்டளை பிறந்தபோது இத்தாலியாவிலிருந்து கொரிந்து பட்டிணம் வந்து குடியேறி **ஆக்கில்லா,பிரிசில்லா** இருவரும் கொரிந்து பட்டணத்தில் வந்து கூடாரத் தொழிலில் ஈடுப்பட்டார்கள். **பிழைப்புக்காக கூடாரத் தொழிலைச்** செய்துவந்த இந்த தம்பதியினர் பின்னர் **ஆவிக்குரிய காரியங்களிலும் ஊழியத்திலும் இணைந்து** செயல்பட்டனர்.

இணைந்து கர்த்தருக்கென்று ஊழியம்செய்யவேண்டுமானால் கணவன்-மனைவி இருவருக்கும் ஒரே **மனம்,ஒற்றுமை,ஆவிக்குரிய வெளிப்பாடு,உற்சாகம் தேவை.** பவுல் வந்தபோது அவர்களோடு சேர்ந்து கூடாரத் தொழிலில் ஈடுபட்டு ஆவிக்குரிய சத்தியங்களை பவுல் அவர்களுக்கு போதித்து, அவர்களை ஊழியத்திலும் உற்சாகப்படுத்தியதால் அவர்கள் **பவுல் அப்போஸ்தனோடு ஊழியத்திலும் இணைந்தனர்.** சுமார் 1.1/2 ஆண்டுகளுக்குப்பிறகு பவுலோடு எபேசுவுக்குப் போனார்கள்.

எபேசுவில் **அப்பொல்லோ** என்னும் யூதனைச் சந்தித்து கிறிஸ்துவின் அடிப்படை சத்தியம் அறியாது ஊழியம் செய்துவந்த அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை இருவரும் அதிக திட்டமாய் போதித்தார்கள். இயேசுவே **கிறிஸ்து** என்கிற சத்தியத்தை அப்பொல்லோவுக்கு திட்டவட்டமாய் இருவரும் போதித்தபடியினால், அப்பொல்லோவை **அகாயாவுக்கு அனுப்பியபோது** அவன் யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம் பண்ணி கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான். இது எவ்வளவு முக்கியமான ஊழியம். இளம் விசுவாசிகளை ஊழியத்தில் உற்சாகப்படுத்தி அவர்களை அடிப்படைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தி அதன்பின்பு பிற சபைகளுக்கு அனுப்பிவசனத்தை பரப்ப அவர்களை ஊக்குவிப்பது இன்று சபைகளில் செயல்படுத்தவேண்டிய அவசியமான ஊழியம் ஆகும். இதைத்தான் ஆக்கில்லா-பிரிஸ்கில்லா இருவரும் சேர்ந்து செய்த ஊழியம் ஆகும். பிரிஸ்கில்லா தனக்கு ஊழியம் செய்ய கிடைத்த எல்லா சந்தர்ப்பங்களையும் நல்ல முறையில் பயன்படுத்தினாள். எபேசுவில் உள்ள இளம் விசுவாசிகளான சீஷருக்கு பவுல் திறன்னு என்னும் வித்தியாசாலையில் போதித்து வந்தான். ஆக்கில்லா,பிரிஸ்கில்லா பவுலுக்கு உடன் ஊழியராய் இருந்தபடியால் இப்பள்ளியில் வேதத்தைப் போதித்து வந்திருக்கலாம். எபேசு பட்டணத்தில் கலகம் ஏற்பட்டபோது **பவுலுக்கு ஆபத்து** நேர்ந்தபோது பிரிஸ்கில்லா,ஆக்கில்லா ஆகிய இருவரும் உறுதுணையாய் இருந்து தங்கள் பிராணனையும் பவுலுக்காக கொடுக்க துணிந்தார்கள் என்று பவுலே சாட்சி கொடுக்கிறார் (ரோம 16:14). பவுல் மாத்திரமல்ல, புறஜாதியாரிலிருந்து இயேசுவை ஏற்றுகொண்டு புதிய விசுவாசிகளான சபையார் எல்லாரும் இவர்களுக்கு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட்டனர். இவ்வாறு கணவன்-மனைவி இணைந்து செய்த இந்த ஊழியம் எத்தனை ஆசீர்வாதமாய் மாறியது. எபேசு, **ரோமாபுரியில் சபை ஸ்தாபிக்கப்பட,ஸ்திரப்பட** இவர்கள் காரணமாயிருந்தார்கள். மனைவியின் ஒத்துழைப்பும் உற்சாகமும் இல்லாமல் கணவன் தனியே இவ்வளவு அரிய பெரிய ஊழியங்களைச் செய்திருக்கவே முடியாது.

## 3). பிரிசில்லாவின் திறக்கப்பட்ட வீடு: (1 கொரி 16:19,ரோமர் 16:3-5)

வீட்டை அடிப்படையாக கொண்ட ஊழியம் கணவன்-மனைவி இருவரின் ஒத்துழைப்பினால் மாத்திரமே மிகவும் பலனுள்ளதாய் இருக்கும்.(Home Based Ministry) புருஷன்-மனைவியின் ஒத்துழைப்பும் உற்சாகமும் இணைந்து செயல்பட்டதால் இவர்கள் தங்கள் வீட்டைத் தேவனுக்கென்று அர்ப்பணிக்க முடிந்தது. பவுல் **எபேசுவிலிருந்து கொரிந்தியருக்கு** எழுதிய கடிதத்தில் ஆக்கில்லா,பிரிசில்லா தங்கள் **வீட்டிலே கூடுகிற** சபையோடு இணைந்து உங்களை வாழ்த்துகிறார்கள் என்றும், கொரிந்து பட்டணத்திலிருந்து **ரோமருக்கு** எழுதும் கடிதத்தில் அவர்களுடைய வீட்டிலே கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள் என்றும் சொல்லுகிறார்.

எனவே **எபேசுவில்** தங்கியிருந்த நாட்களிலும் **ரோமாபுரிக்குப்**போனபோதும் தங்கள் வீட்டில் சபை கூடி வரும்படி செய்தார்கள் எனத்தெரிகிறது. பிரிசில்லா கர்த்தருக்கென்று தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிற ஸ்தீரி.

எபேசுவின் ஊழியத்துக்குப்பின் இருவரும் ரோமாபுரியில் குடியேறியதாகத் தெரிகிறது. நம்மில் எத்தனை பேர் ஊழியத்துக்கென்று **நம் வீட்டைத் திறந்துகொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்?**

மாதாந்திர வீடு சந்திப்பு கூட்டம் வைக்ககூட சிலர் **என் வீடு சிறியதாக** இருக்கிறது. **போதுமான வசதி இல்லை** என்று இப்படி பல சாக்குபோக்குகள் சொல்லுகிறவர்களாய் காணப்படுகிறோமா? யோசித்துப் பார்ப்போம்.

**இதிலே கவனிக்கவேண்டியது** இவர்கள் இருவருக்கும் குழந்தை பிறக்கவில்லை. அதைக்குறித்து அவர்கள் இருவரும் முறுமுறுக்காமல் கர்த்தருடைய ஊழியத்தை செய்தததை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. ஜெபித்தும், ஊழியம் செய்தும் கர்த்தர் ஏன் தங்களுக்கு குழந்தை செல்வம் கொடுக்கவில்லை என்ற கேள்வி இவர்களுக்கு எழுவே இல்லை. தெய்வம் தங்களை குழந்தை இல்லாத நிலையிலும் **இயேசு ஜீவிக்கிறார்**, அவர் அற்புதம் செய்யமுடியும் என்பதை அவர்கள் சுவிசேஷம் அறிவிக்கும்போது அல்லது கூறும்போது உனக்கே குழந்தை இல்லை. உன் ஜெபமே கேட்கப்படவில்லை என்று பலர் கேள்விகளுக்கு எப்படி பதில் கூறியிருப்பார்கள். கர்த்தர் ஒவ்வொருவரையும் தம் சித்தப்படி வழிநடத்துகிறார். எங்களை இந்த நிலையிலேயே வைத்துள்ளார். இது அவரின் சித்தம் என்று மனோரம்மியமாய் வாழ கற்றுக்கொண்டார்கள்.

vvvvvvvvvvvvvvvvvvvvvvvvv

**கிறிஸ்துமஸ் & புதுவருட வாழ்த்துக்கள் - 2017**

**வரும் ஆண்டும் இனி வரும் காலமும் கர்த்தர் உங்கள் எல்லாரையும் ஆசீர்வாதத்துடனும், சமாதானத்துடனும், ஆரோக்கியத்துடனும் வாழ வைப்பாராக. ஆமென்**

# நான்கு சுவருக்குள் ஒரு வாரம்



2016 டிசம்பர் வெளிநாட்டு பயணம் முடித்து இந்தியா திரும்பி மறுபடியும் மஹாராஷ்ட்ரா மாநிலம் **பூனே** மாநிலத்தில் **நிகடி** மெத்தடிஸ்ட் தமிழ் திருச்சபை கூட்டங்களில் பிரசங்கித்து சேலம் திரும்பினேன். இத்தனை நாடுகளிலும் வெளி மாநிலங்களிலும் சென்றபோதும் சளி, இரும்பல் (தடமண்) காய்ச்சல் எதுவும் எனக்கு உண்டாகாதபடி என்னை கர்த்தர் சுகத்தோடு வழி நடத்தினார்.

என் ஊழிய நாட்களில் எனக்கு எந்த சுகயீனமோ, வருத்தமோ, வியாதியோ உண்டாகி அழைத்தவருக்கு நான் பெரும் சுமையாகி போய்விடக்கூடாது என்பது கடந்த 52 வருடங்களாக என் ஜெப வேண்டுதலாக இருந்தது.

52 வருட ஊழியத்தில் எந்த நாட்டிலும் நான் வியாதியில் அகப்பட்டதில்லை. இந்தியாவின் எல்லா மாநிலத்திலும் பிரச்சனை ஏதும் இல்லாமல் ஊழியம் நிறைவேற்றினேன்.

ஆனால்...

2016 டிசம்பர் மாதம் பூனா ஊழியம் முடித்தவுடனே இரண்டு நாட்கள் கழித்து உடல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட எனக்கு நானே வைத்தியம் செய்துகொண்டேன். காய்ச்சல் கட்டுக்குள் வரவில்லை. என் மனைவி, மகன் யாவரும் உடனடியாக என்னை மத்திய அரசால் Salem Steel Plant Hospital லில கொண்டுபோய சேர்த்தார்கள். அங்கு சிறப்பு மருத்துவரான Dr. Benita,M.D., அவர்களின் உடனடி ஆலோசனையின்படிதான் அந்த ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

டிசம்பர் 14 முதல் 21ம் தேதி வரை ஏறக்குறைய 5 நாட்கள் நான்கு சுவர் ஆஸ்பத்திரி அறைக்குள்ளே அனுமதிக்கப்பட்டேன். **மலேரியா, டைபாய்டு, டெங்கு காய்ச்சல்,** வைரஸ் காய்ச்சல் என்று எல்லாவித காய்ச்சல்களைப்பற்றி அறிய பல சோதனைக்குட்படுத்தினார்கள். தலை முதல் கால் வரை Scan, X-Ray, E.C.G., Ultra Sound பரிசோதனை என்று முழு சரீரத்தையும் பாகம் பாகமாக பிரித்து பரிசோதித்தனர். காய்ச்சலுக்கு காரணம் ஏதும் கண்டு பிடிக்கமுடியவில்லை. காரணம் எல்லா பரிசோதனையும் நார்மலாக இருப்பதையே காட்டிற்று.

முடிவாக **தொண்டை,** கபம் விசேஷ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. கல்ச்சர் பரிசோதனையும் பயாப்சி பரிசோதனையும் நடத்தப்பட்டது அதில்தான் பிரச்சனை என்று

கண்டுபிடிக்கப்பட்டு உடனே முடிவு தெரிந்தது. மேலும் இரு கை நரம்புகளிலும் தொடர்ந்து ஊசி மருந்து ஏற்ற, நிரந்தரமாக கை **நரம்புடன்** பொருத்தப்படும் மூன்று வழி பாதையுள்ள **சாதனத்தில் உள்ள பிளாஸ்டிக்** பொருள் எனக்கு **அலர்ஜி** என்று கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு கைகளும் வீங்கி போயின. ஏற்ற வேளையில் **Dr. பெனிட்டா.**M.D., அவர்கள் கண்டுபிடித்து உடனே **பிளாஸ்டிக்** பொருள் நீக்கப்பட்டு **பட்டர்பிளை** நீடில் என்ற பழைய காலத்து பொருளை மாற்றி நரம்புகளில் பொருத்தி மருந்து ஏற்றியபின் **காய்ச்சலும்** தன் கோர தாண்டவத்தை நிறுத்தியது. இரண்டுவித சாதாரண காரணங்களினால்தான் எனக்கு காய்ச்சல் உண்டானது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் என் உடலில் தலை முதல் கால்வரை சகல பாகமும் பரிசோதிக்கப்படவும் எதிலும் எந்த கோளாறும் இல்லை என்ற செய்தி பெரும் திருப்தியை உண்டாக்கினது.

ஒரு வழியாக காயச்சலின் காரணம் கண்டுபிடிக்கப்பட்டது. சுகம் பெற்றேன். எங்கள் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான குடும்பம்தான் Mrs & Mr. Nallathambi அவர்களின் குடும்பம், எங்கள் உறவினர்கள்கூட எங்களிடம் அவ்வளவு பாசம் காட்டவில்லை. ஆனால் இந்த குடும்பத்தின் 3 வாரிசுகளும் எங்கள்மேல் காண்பித்த அன்பு மிக பெரியது. அதில் Dr. பெனிட்டா சாமுவேல், M.D., Joint Director, (M. & HS.) அவர்கள் எங்கள் வீட்டருகே இருப்பதால் எங்கள் குடும்பத்தில் ஒருவராய் இணைந்துவிட்டார்.

என் உடல் நலம் குன்றியபோது இரவும், பகலும் என்னை கவனிப்பதில் அவர் மிகவும் அக்கறையும்,பாரமும் கொண்டார். ஒரு ஊழியக்காரனுக்கு உதவமுடிந்ததே என்ற எண்ணத்தில் அவர் ஆவிக்குறிய சந்தோஷத்தோடு ஜெபத்தோடு வைத்தியம் மேற்கொண்டார். இப்படிப்பட்ட அன்பு குடும்பங்களை கர்த்தர் எனக்கு உலகெங்கும் கிருபையாக கொடுத்துள்ளார். ஆனால் Mr. நல்லதம்பி அவர்களின் குடும்பங்களின் பங்கு மிக அதிகம் ஆகும். இவர்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

என் வயது இப்போது 75 முடியபோகிறது. இதுவரை என் சரீரத்தின் சக்தி குறைந்ததில்லை. நான் வியாதி படுக்கையில் கிடந்ததுமில்லை. இப்படி என் எல்லா ஊழிய கூட்டங்களிலும், என் பிரசங்கத்திலும் கூறி பெருமைப்பட்ட எனக்கு கர்த்தர் நல்ல ஒரு **அடிகொடுத்து** நிற்காமல் ஓடிக்கொண்டே இருந்த என் கால்களுக்கு கட்டாய ஓய்வு கொடுத்து கர்த்தர் என்னை 7 நாட்கள் **படுக்கவைத்துவிட்டார்.** ஆனால் இந்த 7 நாட்களும் நான் **வெளி உலகை** பார்க்கவில்லை. TV பார்க்கவில்லை, யாரோடும் பேசவில்லை. **என் மனைவி - என் மகன்-மருமகள்** மாத்திரம் இரவும் பகலாககூட இருந்தனர். என் மனைவிக்கும் கால் முட்டிக்கு நடையில்லா ஓய்வு கிடைத்தது. இவர் **தேய்ந்த கால் மூட்டு** எலும்புக்கு என்னோடு கூடவே 24 மணி நேரமும் கூடவே இருந்ததால்அவரின் கால் நல்ல ஓய்வு பெற்றது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இந்த நாட்களில் எந்த **எண்ண ஓட்டமும்** இன்றி, ஊழியத்தைப்பற்றியும் சிந்தனையில்லாமல் **மூடிய என் கண்களை** திறக்காதபடி சிந்தனையற்ற சரீரமாக கட்டிலில்

கிடந்தது. என் வாழ்க்கையில் **புது அனுபவமாக** இருந்தது. உடல் வலிஇல்லை, **தலைவலியில்லை,** களைப்பும்இல்லை, இரண்டு கைகளின் நரம்புகளில் மருந்துகள் மட்டுமே மாறி மாறி ஏற்றப்பட்டவாறு கிடந்தேன்.

இந்த நீண்டகால படுக்கையில் **தரிசனங்களோ, சொப்பனமோ** எனக்கு உண்டாக வில்லை.

என் மனைவி தன் படுக்கையில் Talking Bible மூலம் வேத வசனங்களை சத்தமாக வைத்துக்கேட்டுக்கொண்டிருந்ததால் அந்த வசனங்கள் என் காது வழியே என் மூளைக்கு சென்றடைந்தன. மரணபயமோ, **மனைவியைப்பற்றி,**பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைப் பற்றியோ **ஜாமக்காரனில்** அடுத்து எதைப்பற்றி எழுதுவேன் என்பதைப்பற்றியோ ஒரு சிறிதும் சிந்தனையற்ற நிலையிருந்தது எனக்கே புது அனுபவமாக இருந்தது. காலை ஒரு ஜெபம் மதியம் ஒரு ஜெபம், இரவு ஒரு ஜெபம். அந்த நாட்களிலும் அவ்வளவு ஜெபம் மட்டுமே என்னால் செய்ய முடிந்தது.

இதில் விசேஷம் எண்ணவென்றால் இந்த 7 நாட்களிலும் ஒரு **சொப்பனமோ,** தரிசனமோ நான் காணவில்லை. மேலும் அந்த நாட்களில் **பரலோக** காட்சிகளோ, பரலோக தரிசனங்களோ பார்க்காததற்காக தேவனை துதிக்கிறேன். எனக்கு இவைகள் எதுவும் தேவையற்றது என்பதை என் கர்த்தர் அறிவார்.

இயேசு கிறிஸ்து உலகில் மனிதனாக வாழ்ந்தபோது பரலோக ராஜ்யத்தை குறித்து 3 விதமாக கூறினார். **பரலோக ராஜ்யம்** பலவந்தப்பண்ணபடுகிறது என்றார். மற்றொரு இடத்தில் **பரலோக ராஜ்யம்** வர காத்திருங்கள் என்றார். மற்றொரு இடத்தில் **பரலோக இராஜ்யம்** உங்களுக்குள் இருக்கிறது என்கிறார்.

உண்மையான மனம் திரும்புதலின் அனுபவத்தை பெற்று இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டால் அவனுக்குள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் திரியேக தெய்வமாகவும் ஏக தெய்வமாகவும் நமக்குள் வாசம் பண்ணுகிறார். எபே. 1:13 யோ. 14:23,24 அதனால்தான் அவர் **இம்மானுவேலாக** நமக்குள் **நம்மோடு** எப்போதும் வாழ்கிறார் என்று ஞாபகப்படுத்துகிறது.

இந்த உணர்வு என்னைவிட்டு பல **ஆண்டுகளாக** எனக்குள் நீங்காது இருப்பதால் எதைப்பற்றியும் கவலையற்றவனாய், பயமற்றவனாய் கூடுதலான தைரியத்தோடு என்னால் இத்தனை வருடங்கள் ஊழியம் செய்து சாட்சிகெடாமல் வாழமுடிகிறது. **ஆவியானவரின் நிறைவு** எல்லா நேரமும் என்னில் நிரம்பி உள்ளதால் என் ஊழியத்தில் கர்த்தர் வெற்றி, சிலர் மீது கைகளை வைத்து ஜெபிக்கும்போது அவர்களுக்குள்ளே பல மாற்றங்கள் உண்டாகிறது, அதன்மூலம் **சுகங்கள் அற்புதங்கள்** கொடுக்கிறார். **வெளிபாடுகள்** நடந்திருப்பதை பலர் கூறி கேள்விபட்டிருக்கிறேன். இதற்கெல்லாம் ஒரே காரணம் எனக்குள்

நிரந்தரமாக வாசம் செய்யும் **என் தெய்வத்தின் பிரசன்னம்** என்னை **பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால்** எதையும் செய்யமுடியும், **தாங்கமுடியும்** சகிக்கமுடியும் **பட்டினி** கிடக்கவும் முடியும். பிலி. 4:9,10

எப்படியோ கர்த்தரின் பெரும் கிருபையால் 2016 டிசம்பர் மாதம் 21ம் தேதி வீடுவந்து சேர்ந்தேன். மெதுவாக பிடித்துக்கொண்டே நடைபழகுகிறேன். எப்படியாவது 2017ம் வருடம் நடக்க இருக்கும் கூட்டங்களில் **நின்றுகொண்டு** பிரசங்கம் செய்யவேண்டும். அதற்காக என்னையும், என் ஊழியத்தையும் விளங்கிக்கொண்டவர்கள் என் ஊழியத்தை தாங்குகிறவர்கள் எனக்காக ஜெபித்தால் போதும்.

இதை 2016 டிசம்பர் 26ம் தேதி எழுதி முடிக்கிறேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

## மிகவும் பொருத்துக்கொள்ளவும்......

2016 அக்டோபர் 28ம் தேதியிலிருந்து நவம்பர், டிசம்பர் 28ம் தேதி வரை என் வீட்டு தொலைபேசிகள் எல்லாவற்றையும் கட் செய்துவிட்டேன்.

தொலைபேசி வழியாக எல்லா ஜெபக்குறிப்புகளும் குடும்ப பிரச்சனையும் நான் கேட்டு ஜெபிப்பது வழக்கம். கடந்த இரண்டு மாதங்களாக நான் மலேசியா, ஆஸ்ட்ரேலியா நாடுகளுக்கு சென்றதால் எல்லா தொலைபேசிகளும் என் மனைவி திருமதி **வதனி புஷ்பராஜ்** அவர்களைத்தவிற வேறு யாரும் என் அலுவலகத்தில் கையாளுவதில்லை.

என் மனைவியின் ஒரு கால் மூட்டு தேய்மானமானதால் ஒவ்வொரு முறையும் **எழுந்து நடந்து** ஒவ்வொரு முறையும் டெலிபோன் கால்ஸை அட்டெண்ட் செய்ய கஷ்டப்பட்டார்.

தொலைபேசிமூலம் வரும் விவரங்களை **அலுவலகத்தில்** யாரும் அறியக்கூடாது என்பதற்காக நான் இந்தியா திரும்பும் வரை தொலைபேசி துண்டிப்பை **தற்காலிகமாக** ஏற்பாடு செய்து விட்டுபோனேன். இதனால் லட்சக்கணக்கான ஜாமக்காரன் குடும்பத்தினர் மிகவும் சோர்வுற்று எதற்கு பேசாத போன் வைத்திருக்கிறீர்கள் என்று சலிப்போடு கேட்கும் அளவு நிலைமை உண்டானது. இனி அப்படி உண்டாகாது இந்தியா திரும்பிவிட்டேன் என்று அறிவித்துக்கொள்கிறேன். கடந்த மாதங்களில் உன்டான தொலைபேசி பிரச்சனைக்காக எங்களை பொருத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*DIALOGUE SESSION WITH*

# Dr. PUSHPARAJ

# மலேசியா ஊழியம்

பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களை ஆங்காங்கு கூடிவரச்செய்து பிரச்சனைக்குரிய உபதேசங்களைக்குறித்து கலந்துரையாடல் நிகழ்ச்சியை **பினாங், ஈப்போ, கோலாலம்பூர், ஜோஹர்பாரு** ஆகிய முக்கிய நகரங்களில் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த அருமையான திட்டத்துக்கு வடிவமைத்து அனைத்து **பெந்தேகோஸ்தே சபை** பாஸ்டர்களை ஆங்காங்கு கூடிவர செய்து பொருப்பேற்று ஏற்பாடுகளை செய்தது கத்தோலிக்க சபை தந்தை **ஹென்றி** அவர்களாகும் பங்குதந்தையாக ஊழியம் செய்து அந்த ஊழியத்தை விட்டுவிலகி வசனத்தின்படி **ஆவிக்குரியபடி** ஊழியத்தையும் **சமூக தொண்டையும்** மலேசியாவில் செய்து வருகிற போதகர்.**ஹென்றி** அவர்கள்(கோலாலம்பூர்) (TPCFM) Association of Tamil Pastors and Christians Fellowship of Malaysia) மலேசியா அனைத்து தமிழ் பாஸ்டர்களின் சங்கத்துக்கு தலைவராக அவர்களை **மலேசியா அரசாங்கமே** நியமித்துள்ளதால் அனைத்து தமிழ்சபைகளின் பிரதிநிதியாக **மலேசியா கவர்மெண்டில்** அறியப்படுகிறார். இவர் செய்யும் **சமூகசேவை மைத்துக்கு** 2016 அக்டோபர் மாதம் மலேசிய பிரதமர் எந்த முன்அறிப்பும் இல்லாமல் வருகை தந்துள்ளார். இவரின் **அனாதை இல்லம், கைவிடப்பட்ட** பெண்களை படிக்க வைப்பது போன்ற சேவைகளை பாராட்டி சென்றுள்ளார். அரசாங்க சார்பில் பல உதவிகளை செய்ய ஏற்பாடுகளையும் மலேசிய பிரதமர் அவர்கள் செய்து வாழ்த்திவிட்டு சென்றுள்ளார். இது மலேசியா அனைத்து தமிழ் கிறிஸ்தவர்களுக்கும் கிடைத்த கவுரவமாக கருதி தேவனை துகிக்கலாம்.

## கலந்துரையாடல்





பெந்தேகோஸ்தே சபைகளில் காணப்படும் **தவறான** உபதேசத்தையும், குறிப்பாக **அன்னிய பாஷையைப்** பற்றியும் நான் ஜாமக்காரனில் தொடர்ந்து எழுதிவந்தது மலேசிய சபைகளில் பெரும் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது. ஆகவே அனைத்து **பெந்தேகோஸ்தே** சபை பாஸ்டர்கள், சபை விசுவாசிகள் மற்ற சபை பாஸ்டர்கள் எல்லாரையும் வரவழைத்து டாக்டர் புஷ்பராஜ் (ஜாமக்காரன்) அகிய என்னை **பாஸ்டர்கள் கேள்விகள்** கேட்கவேண்டும். நான் அதற்கு பதில் கூறவேண்டும். இதுதான் கலந்துரையாடல் ஏற்பாடாகும். அதை வீடியோவில் பதிவு செய்தார்கள்.

**பலர் கேள்விகள் கேட்டார்கள்.**

மலேசியா நாட்டில் முதல் கலந்துரையாடல் (Penang) மாநிலத்தில் (Hope Assembly Church ல் தொடங்கப்பட்டது. இப்படி ஒவ்வொரு மாநில தலைநகரங்களிலும் கலந்துரையாடல் மிக அமைதியாக நிறைவேறியது. குறிப்பாக **அன்னிய பாஷை** பேசுகிற நீங்கள் உங்கள் பாஷைகளை பரிசோதனை செய்து பார்த்தீர்களா? போன்ற பல கேள்விகளை நான் கேட்டேன். அதற்கான பதிலை பாஸ்டர்கள் மிக நாகரீகமான முறையில் பதில் சொன்னார்கள். அனுர்லு் அதற்கான **ஆதாரம் வேதத்தில்** காட்டமுடியுமா? என்ற கேள்விக்கு யாரும் பதில் கூற முடியவில்லை. ஒரு சில நகரங்களில் சம்பந்தமில்லாத வசனங்களை சுட்டிகாட்டினார்கள். பெரும்பாலான பாஸ்டர்கள் வேத புத்தகமே கையில் எடுத்துவரவில்லை. ஒரு இடத்திலும் வாக்குவாதமாகவோ,கோபவார்த்தைகளோ அங்கு வந்த பாஸ்டர்கள் யாரும் உபயோகிக்கவில்லை. **சபையில்** பேசும் பாஷை - **தனி ஜெபத்தில்** பேசப்படும் அன்னிய பாஷை - இப்படிப்பட்ட முக்கிய விஷயங்களுக்கு விளக்கம் கொடுக்க **அவர்களால்** இயலவில்லை. சபையில் அன்னிய பாஷை பேசியதாக வேத்தில் அவர்களால் சுட்டிக்காட்டமுடியவில்லை. அது வரம் (பரிசு)Gift அது கேட்கப்படகூடாது. அது தேவனால் **கொடுக்கப்படு வதாகும்.** அதுவும் **வேத புத்தகம் எழுதப்படாத** காலத்தில் முதல் நூற்றாண்டில் சபையின் பக்திவிருத்திக்கு பரிசுத்தம் மிக அவசியம், அதற்காக அன்றைய கால சபைக்கு **அன்னிய பாஷை** வரமாக செயல்பட்டது. அந்த பாஷையில் **அர்த்தம்** இருந்தது. அதில் எச்சரிப்பு இருந்தது, குற்றங்கள் **சுட்டிக்காட்டப்பட்டது,** இந்த காரணங்களுக்காக வேதம் எழுதப்படாத காலத்தில் அந்த வரம் அவசியமாக இருந்தது.

அந்த கூட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பாஸ்டரும் இன்னும் ஒன்று அல்லது இரண்டு பாஸ்டர்கள் மட்டுமே **வேதாகம கல்லூரியில்** படித்தவர்கள். மற்ற பெரும்பான்மை பாஸ்டர்களுக்கு வேத வசன சரித்திரம் தெரியவில்லை. **பாட்டு ஆராதனை, சத்தம்போட்டு ஜெபிப்பது** மக்கள் உணர்ச்சிகளை தூண்டிவிட்டு,**சத்தமாக அல்லேலூயா,**ஆமென் போன்ற வார்த்தைகளை வானம் எட்டும்அளவு சத்தமாக கூவவைப்பது இவைகள் ஒருவருக்கு தெரிந்தால் போதும் அவர் பாஸ்டர் ஆகிவிடலாம். இந்தியாவைப்போல அங்கும் குறைந்தபட்ச வேதாகம படிப்புக்கோ, வேதாகம பள்ளிக்குகூட போகாதவர்கள் பாஸ்டர்களாகி விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் வேத வசனத்துக்கு **சொந்த வியாக்கியானம்** கொடுத்து சபை மக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பாஸ்டர் பேசுவது வேத வசனத்துக்கு முரணானது என்று பாஸ்டரில் சுட்டிக்காட்டி பேச யாருக்கும் தைரியம் இல்லை. காரணம் சபை மக்களில் பெரும்பாலானவர்களுக்கு **வேத வசன ஞானம்** இல்லை. அவர்கள் **வேதத்தை வாசிப்பதும்**

இல்லை. பெந்தேகோஸ்தே சபை இப்படித்தான் போய்கொண்டிருக்கிறது. பரவசத்துக்கு முக்கியவத்துவம் கொடுத்து மக்களை **சரீர பிரகாரம்** சந்தோஷப்படுத்தி அனுப்பிவிடுகிறார்கள். இந்தியாவிலும் அப்படித்தான் சபைகள் நடத்தப்படுகிறது.

**சத்தமில்லாமல்** ஆராதிக்கும் சபைகளை **செத்தசபை** என்று முத்திரை குத்திவிடுகிறார்கள். கேள்வி கேட்ட வேதாகம கல்லூயில் படித்து கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றும் ஒரு பாஸ்டர் என்னிடம் கேட்டார். அப்படியானால் **இப்போது அன்னிய பாஷை** வரம் இல்லை என்கிறீர்களா? என்றார்.

இப்போது **சபை மக்கள்** பேச கர்த்தர் **அன்னிய பாஷை** கொடுக்கவில்லை. ஆனால் அந்த **வரம்** இப்போதும் உண்டு. இயேசுவின் சீஷர்களின் ஒரவரான **தோமா** இந்தியாவுக்கு வந்தபோது கேரளாவில் **கிடங்கனூர்** என்ற இடத்தில் குளத்தில் சூரிய நமஸ்காரம் செய்ய வந்த **நம்பூதிரிகள்**(பிராமணர்கள்) என்று அழைக்கப்படும் உயர் ஜாதியினருக்கு இனி நாங்கள் சிருஷ்டியை(சூரியனை) வணங்காமல் சிருஷ்டிகரை அதாவது அதை உணடாக்கியவரைதான் வணங்கவேண்டும் என்று கூறி **இயேசு**கிறிஸ்துவைப்பற்றி சுவிசேஷமாக கூறி அறிமுகப்படுத்தி அங்கு ஒரு அற்புதத்தையும் நிகழ்த்தினார். அன்று தோமாவுக்கு மலையாள பாஷை தெரியாது பின் எப்படி பேசினார்?. அங்குதான் **அன்னிய பாஷை வரம்** கிரியை செய்யப்பட்டது. அவர் வாயை திறந்தார் **மலையாள பாஷையில்** செய்தி வருகிறது. இதுதான் வரம். ஆண்டவராக பார்த்து கொடுப்பது.

**இரண்டாவது** உதாரணமாக பல வருடங்களுக்கு முன் நான் ஜாமக்காரனில் எழுதிய உண்மை சம்பவத்தை கூறினேன்.

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் (ஆந்திரா என்பது தெலுங்கு பாஷை பேசும் மக்கள் உள்ள மாநிலமாகும்) ஒரு ராணுவ உயர் அதிகாரியின் மனைவி (ஒரிசா மாநிலத்தை சேர்ந்தவர்) தன் குடிகார கணவனால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டு **தற்கொலை செய்ய** தீர்மானித்து பாலிடால் என்ற **எலி விஷத்தை** கடையில் விலைக்கு வாங்கி வீடு திரும்புகிறபோது மாலை 7-00 மணி ஒரு தெருவில் குறிப்பிட்ட வீட்டை அவள் கடந்து போகும்போது இவளின் **பெயர் சொல்லி** அழைப்பதை கேட்டாள். சத்தம் வந்த வீட்டு வாசல்படியில் நின்றாள். அந்த வீட்டுக்குள் இருந்து மகளே! நான் உன் கணவரை குடிப்பழகத்திலிருந்து மாற்றமுடியும்! நீ வாழ வேண்டும் **தற்கொலை** வேண்டாம், உன் பிள்ளைகள் அனாதைகளாகும். நான் உன்னை நேசிக்கிறேன். இந்த வார்த்தைகள் மட்டும் அவள் கேட்டாள் அதன் பிறகு ஒரு சத்தமும் கேட்கவில்லை. தான் பேசும் **ஒரியா** மொழியில் அந்த வார்த்தைகள் பேசப்பட்டது. அவள் தன் வீடுக்கு திரும்ப வந்து சேர்ந்தாள் அந்த விஷத்தை அவள் சாப்பிடவில்லை. மறுநாள் காலை கடைக்கு போவதாக வீட்டில் கூறிவிட்டு அந்த குறிப்பிட்ட வீதியல் தன்னோடு பேசப்பட்ட வார்த்தை எந்த வீட்டிலிருந்து வந்ததோ அந்த வீட்டை தேடினாள் கண்டுபிடித்தாள். அந்த வீட்டில் இருந்த சகோதரியிடம் இந்த வீட்டில் யாராவது **ஒரியா** பாஷை பேசும் நபர் உண்டா என்றாள். அந்த சகோதரிக்கு அவள் பேசிய **ஒரியா** மொழி விளங்கவில்லை. ஹிந்தியில் பேசினால், அல்லது தெலுங்கில் பேசினால் எனக்கு விளங்கும் என்று ஹிந்தியில் அவளிடம் பதில் கூறினாள். உடனே அவள் ஹிந்தியில்

அதே கேள்வியை மறுபடியும் கேட்க இந்த வீட்டில் நாங்கள் யாவரும் **தெலுங்கு,** ஹிந்தி மட்டுமே பேசுவோம். ஒரியா பாஷை பேசும் நபர் இங்கு யாரும் இல்லை.

அப்போது அவள் தன் நிலையையும் தற்கொலைக்கு முயன்றதையும் ஹிந்தியில் கூறி அழுதாள். அன்று மாலை உங்கள் வீட்டில் யாரோ ஒரியா பாஷையில் பேசிய வார்த்தையை கூறிபேசியவர் தன் **பெயரையும்** குறிப்பிட்டதை கூறினாள். இன்று நான் மரிக்கவேண்டியாதாகும். ஆனால் அந்த கணவரை **குடிபழகத்திலிருந்து விடுவிக்க முடியும்** என்று நேற்று என்னுடன் பேசிய அந்த நபர் யார் ? என்றாள்.

அந்த வீட்டு சகோதரி நேற்று எத்தனை மணிக்கு நீ அந்த சத்தத்தை கேட்டாய் என்றாள். மாலை 7-00 மணி என்றாள். அந்த குறிப்பிட்ட நேரத்தில் நாங்கள் குடும்ப ஜெபம் செய்துகொண்டிருந்தோம். **தெலுங்கு** பாஷையில்தான் பாட்டுபாடி ஜெபிப்போம். எங்கள் யாருக்கும் ஒரிசா பாஷை தெரியாதே ஆனால் உன்னிடம் பேசி **தற்கொலையிலிருந்து** தப்புவித்தது நாங்கள் ஆராதிக்கும் **இயேசுகிறிஸ்துவாகத்தான்** இருக்கும். அவரால் சகலத்தையும் மாற்றவும் புதுபிக்கவும் முடியும். எதற்கும் நாளை நீ இங்கு வந்தால் எங்கள் பாஸ்டரிடம் அழைத்து போகிறேன். அவர் உனக்கு சரியான விவரம் அறிவிப்பார் என்றார்.

மறுநாள் அவளை அழைத்து சென்று பாஸ்டரிடம் விவரம் கூறி அறிமுகப்படுத்தினார். பாஸ்டர் (அந்த பாஸ்டர் அன்னிய பாஷை பேசுபவர் அல்ல) அந்த பெண்ணிடம் அன்று உன்னோடு ஒரிசா பாஷையில் பேசியது இயேசு கிறிஸ்துதான் என்று கூறி அவளுக்கு **சுவிசேஷம்** அறிவிதது, இயேசு கிறிஸ்துவால் அந்த தெய்வம்தான். உன் கணவரை மாற்ற வல்லமை உண்டு. நீ அவசரப்பட்டு உன் வாழ்க்கையை அழித்துக்கொள்ளாதே! என்று கூறி ஜெபித்து அனுப்பினார். சுமார் 8 மாதத்துக்குபின் அவள் கணவர் **ஈரல் வீக்கம்** ஏற்பட்டு ஆஸ்பத்திரி சென்று சுகம் பெற்று திரும்பினார். இப்போது **குடியை நிறுத்திவிட்டார்.** இப்போது தன்னோடு அந்த தெலுங்கு பாஷை பேசும் குடும்பத்தினர் மூலம் ஒரியா மொழியில் இயேசு தெய்வம் என்னோடு பேசி என்னை தற்கொலையிலிருந்து காப்பாற்றி, உங்களையும் சுகப்படுத்தி குடியை நிறுத்த ஏறபாடு செய்ததும் இயேசுதான் என்று தன் கனவனிடம் கூறினாள். அதன்பின் அந்த தம்பதிகள் இருவரும் அந்த பாஸ்டரை மறுபடியும் நேரில் சந்தித்து பேசி **குடும்பமாய் ஞானஸ்நானம்** பெற்று நல்ல கிறிஸ்தவர்களாய் மாறினார்கள் ஒரு வருடத்தில் அவள் கணவர் **பதன்கோட்** என்ற ஊருக்கு பதவி உயர்வுபெற்று அங்குள்ள சபையில் ஆராதித்திக்கொண்டிருக்கிறார்.

இந்த சம்பவத்தில் மூலம் அந்த **தெலுங்கு பாஷை** பேசும் குடும்பத்தினரே அறியாத நிலையில் அவர்களின் **வாயை** கர்த்தர் உபயோகித்து அந்த **ஒரியா பாஷை** பெண்ணையும் கணவரையும் மனம் திரும்ப வைத்து தன் பிள்ளைகளாய் இயேசு கிறிஸ்து மாற்றினார். இதுதான் அன்னிய பாஷை வரம். இப்போதும் அந்த வரம் செயல்பட்டும்கொண்டிருக்கிறது என்றேன். ஆனால் சபையில் நீங்கள் யாவரும் பேசுவது **அன்னிய பாஷை அல்ல.** தயவுசெய்து அதிலிருந்து மனம் திரும்புங்கள். உங்கள் மூலமாய் உங்களை நம்பி வருகிற சபை மக்களை ஏமாற்றாதீர்கள். ஆவியானவருக்கு விரோதமாய் நீங்கள் உபதேசித்தாலும் நான் உபதேசித்தாலும் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படமாட்டோம். ஜாக்கிரதை

என்று கூறி முடித்தேன்.

கடைசியாக நடந்த கலந்தாய்வு கூட்டத்தில் மட்டும் ஒரு குறிப்பிட்ட பாஸ்டர் மெத்தடிஸ்ட் சபையிலிருந்து ஓய்வு பெற்றபோது இனி வாழ ஒரு வழி வேண்டும். ஆகவே இவர் பெந்தேகோஸ்தே சபையில் சேர்ந்து போலியான **அன்னிய பாஷை** பேசி தலைமை ஸ்தாபனத்தை நம்ப வைத்து அவர்களின் ஒரு கிளை சபைக்கு தலைமை பாஸ்டராக பணியாற்றுகிறார். அவரை நான் சிங்கப்பூர் பேச ஆரம்பித்த 1971ம் ஆண்டுகளிலேயே நான் அவரை அறிவேன். அப்போது அவர் **அன்னிய பாஷையை** எதிர்த்தவர். இப்போது ஓய்வுபெற்றபின் வாழ்க்கை நடத்த பெந்தேகோஸ்தே சபையில் இணைந்து சபை பாஸ்டரானார். இப்போது தன் உபதேசங்களை மாற்றிக்கொண்டார். **காரில்** பயணம் செய்யும்போது **அன்னிய பாஷையில்** ஜெபித்துக்கொண்டே போவேன் என்று கூறி முடித்தார். அதை மறுத்து நான் விளக்கம் கொடுக்க நேரம் கிடைக்காதபடி கூட்டத்தை முடிக்கலாம் என்றார். நல்ல வேளை பாஸ்டர் ஹென்றி அவர்கள் பாஸ்டர் கூறியதற்கு **டாக்டரின் பதிலை** கேட்டுவிட்டு கூட்டத்தை முடிக்கலாம் என்றார்.

அன்னிய பாஷைதான் எல்லா தவறான ஊழியத்துக்கும் இன்று பேசப்படும் **பொய்யான தீர்க்கதரிசனம்,** ஜெபத்தில் **பெயர் அழைப்பது,** கை நீட்டினால் **விழவைப்பது** போன்ற பொய் **ஊழியத்துக்கு** அஸ்திபாரம் ஆகும் என்றேன். கடைசியாக பேசின அந்த பாஸ்டர் அவர்கள் தன் மனைவியைவிட்டு பிரிந்து சாட்சியில்லாமல் **சபையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்** பரிசுத்த ஆவியானவர் குடும்பத்தை பிரிக்கிறவர் அல்ல. அவர் குடும்பத்தை சேர்க்கிறவர். சொந்த குடும்பத்தை சரியாக நடத்தாதவன் சபையை எப்படி நடத்துவார். பாஸ்டரின் மனைவியை பிரிய என்ன நியாயமான காரணம் கூறினாலும் பாஸ்டர் (மேய்ப்பன்) தகுதியை இழந்துவிட்டாரே. எப்படி சபைக்கு இவர் **மாதிரியாக** இருக்கமுடியும். இது **மாய மாலம்** அல்லவா: அவர் **அன்னிய பாஷையிலேயே ஜெபித்துப்கொண்டு** கார் ஓட்டினாலும் அவர் ஜெபித்தது **பொய்** அவர் பேசிய அன்னிய பாஷையும் பொய் அவர் வாழ்க்கையும் பொய்யாய்போனதே!

முதல் நூற்றாண்டிலும் சீஷர்கள் ஆரம்பித்த சபைகளில் சபை மக்கள் அன்னிய பாஷை பேசவில்லை. பின் எப்படி இப்போதைய பெந்தேகோஸ்தே சபைகளில் அன்னிய பாஷையில் இப்போது யாவரும் ஜெபிப்போம் என்று **பாஸ்டர்** கட்டளையிடமுடியும். கர்த்தர் தானே அன்னிய பாஷையை பேச வைக்கவேண்டும். பாஸ்டர் அன்னிய பாஷையில் **பேசுங்கள்** என்றால் சபை மக்கள் பேசுகிறார்கள். நிறுத்துங்கள் என்று பாஸ்டர் கூறினால் **நிறுத்திவிடுகிறார்கள்.** ஆகவே என் முடிவுரை என்னவென்றால் இப்போது பெந்தேகோஸ்தே சபைகளில் பேசப்படும் **அன்னியபாஷை** அனைத்தும் **பொய்யானவை** ஆகும். வேத வசனத்துக்கு புறம்பானவை ஆகும்.

**குறிப்பு:** இப்படிப்பட்ட கலந்துரையாடல் கூட்டங்களை இந்தியாவில் குறிப்பாக நம் தமிழ்நாட்டில் அனைத்து பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் தலைவர்கள் தீர்மானித்து ஏற்பாடு செய்தால் அதற்கு நான் ரெடி. **வாக்குவாதம்** என்றால் அதற்கு நாங்கள் அல்ல என்று பவுல் கூறியதுபோல் **வாக்குவாதம்** செய்யமுயலாமல் **சண்டைபோடாமல்**

கத்திபேசாமல் வசனத்தை ஆதாரமாக்கி பேசினால் நான் நிச்சமாக எனக்கு தெரிந்த வசன அனுபவத்தில் நிச்சயம் பேசவருவேன். நமக்கு மத்தியில் **கிறிஸ்து நிற்கிறார்** என்ற எண்ணத்தோடு வசனத்தின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு தெளிவு பெறுவோம். **நியாய தீர்ப்பில்** சபைகளின் சட்டமோ,பெந்தேகோஸ்தே சபையின் சட்டத்தை வைத்தோ கர்த்தர் நியாயம் தீர்க்கமாட்டார். நம் கையில் உள்ள **வேத புஸ்தகத்தை** மையமாக வைத்துதான் நியாயம் தீர்க்கப்படுவோம். மலேசியாவில் இந்த அருமையான வாய்ப்பை ஏற்படுத்திகொடுத்த பாஸ்டர் ஹென்றி அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். அந்த கூட்டங்களில் தங்கள் கருத்தை பகிர்ந்துகொண்ட அத்தனை **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களுக்கும்** விசுவாசிகளுக்கும்,மற்ற சபையிலிருந்து கலந்துக்கொண்ட பாஸ்டர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

# SHALOM FAMILY ENRICHMENT MISSION

மேலே காணப்படும் ஷாலோம் என்ற யெரில் ஒரு இயக்கம் சென்னையில் உள்ள குடும்பங்களை சந்தித்து ஜெபகுழுக்களை உருவாக்குகிறது. சென்னையில் **சமாதானமில்லாத குடும்பம்,உடைந்த குடும்பம்** இவர்களுக்கு ஆலோசனையும் கொடுத்து அவர்களை அடிக்கடி சந்தித்து அவர்களை **வசனத்தில்** வழி நடத்துகிறார்கள். அப்படியே **புற மதஸ்தவர்களுக்கு** அவர்கள் வீடுகளை சந்தித்து அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கிறார்கள். இதை முழுநேர பணியாகவே செய்கிறார்கள்.

சிறுவர் ஊழியத்துக்கு (Scripture Union) பொருப்பு வகித்து ஊழியம் செய்த சகோதரர் **ராஜாசிங்** அவர்கள் சில குடும்பங்களுடன் இணைந்து இந்த குடும்ப கூடுகையை சில ஆண்டுகளாக செய்து வருகிறார்கள்.

அப்படி சந்திக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பங்களை வருடத்துக்கு ஒருமுறை ஒரு இடத்தில் கூட்டிச்சேர்த்து அவர்களுக்கு **வேத பாடமும்** நடத்தி ஒரு நாள் முழுவதும் ஒரவருக்கொருவர் ஆவிக்குரிய ஜீவியத்தை குறித்து பகிர்ந்துகொள்ளும் ஏற்பாட்டை சிறப்பாக செய்து வருகிறார். அப்படிப்பட்ட ஒருநாள் கூடுகை 2016 அக்டோபர் மாதம் 30ம் தேதி சென்னை (சேத்துபட்டு) கிறிஸ்தவ கல்லூரியில் (M.M.C.) நடத்தினார்கள். அதில் ஒரு நாள் முழுவதும் கர்த்தருடைய வசனத்தை பகிர்ந்துகொள்ள என்னை (Dr. புஷ்பராஜ்) அழைத்து சிறப்பு ஏற்பாட்டை நடத்தினர். அதில் **கேள்வி-பதில்** பகுதி சிறப்பாக அமைந்தது. அதில் குடும்ப பிரச்சனைகளும் அலசப்பட்டது. கர்த்தர் இப்படிப்பட்ட குடும்ப கூடுகையை ஆசீர்வதித்கிறார்.

சென்னையில் உள்ளகுடும்பங்களை நேரில் சந்திக்கும் ஊழியம் யாரும் செய்யாதது ஆகும். அதை **சகோ.ராஜாசிங்** அவர்களும்,அவர் **மனைவியும்** இணைந்து இந்த ஊழியத்தை செய்து வருகிறார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. சென்னையில் உள்ள குடும்பங்கள் இவர்களை அழைத்து தங்கள் வீடுகளிலும் இப்படிப்பட்ட ஜெப கூடுகையை நடத்த விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண். **சகோ. ராஜாசிங்** 938272080 (சென்னை) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

# CSI KANYAKUMARI DIOCESE
# VELLAMKODU ஆயர் மண்டல திருச்சபை CSI CHRUCH CONVENTION 2016







இங்கு நடந்த கூட்டங்களில் சுற்றுவட்டார அனைத்து சபைகளிலிருந்தும் மக்கள் வந்து கலந்துக்கொண்டனர். சனிக்கிழமை பகல் ஆலோசனை கூட்டத்துக்கும் மக்கள் வந்து ஆலோசனைப்பெற்று ஜெபித்து சென்றனர். சபை ஆயர் **Rev.S.சுஜின் பிரிட்டோர்** அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை நல்லமுறையில் ஜெபத்தோடு ஆயத்தப்படுத்தியிருந்தார். **Rev. D. ஜஸ்டின் தேவதாசன்(சேகரத்து போதகர்) தோட்டவாரம் மேஜர். ஜான் கிறிஸ்டோபர்(இரட்சன்ய சேனை) ஆகியவர்கள் முன்னிலை வகித்தனர்.** பாடல் குழுவினர்(கல்லங்குழி) **வாய்ஸ் ஆப் சீயோன் எல்லா நாளும் கூட்டங்களில் பாடல் பாடினார்கள். கூட்டங்கள்** ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது.

## முக்கிய அறிவிப்பு:

டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ் அப்,பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ் அப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். - டாக்டர்.புஷ்பராஜ்

# மதுரை - இராமநாதபுரம் CSI டையோசிஸ்

# தேனி CSI St. Paul Church கூட்டங்கள்




இங்கு சுமார் 35 ஆண்டுகளுக்கு பிறகு நான் இந்த ஊர் சபையில் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். இந்த சபையின் **ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர்** இக்கூட்டங்களை மிகவும் ஜெபத்துடன் ஏற்பாடு செய்ததால் கூட்டத்தின் ஆரம்பம் முதல் கர்த்தரின் ஆவியானவரின் கிரியை மிக அற்புதமாக இருந்தது.

ஆகஸ்ட் 15 திங்கள் **சுதந்திர தினத்தன்று** ஒரு நாள் முழுவதும் **தியான கூட்டமும்** நடந்தது. **கேள்வி - பதில்** நேரம் மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. சபை ஆயர் **Rev.C. ஜேக்கப் வின்சிலின்** அவர்களும் இக்கூட்டம் சிறப்புற நடக்க மிகுந்த ஆர்வம் காட்டி கூட்டம் இந்த அளவு சிறப்புடன் நடந்து முடிய நல்ல ஒத்துழைப்பும்ஆலோசனையும் அவர் அளித்திருக்கிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.



## முன்மாதிரியான கேரள மாநில அரசியல் நாகரீகம்



அரசியலில் கீரியும் - பாம்பும் போல கேரள ஆளும் கட்சி - எதிர் கட்சிகள் செயல்பட்டாலும் சில பொது காரியங்களில் கேரள முதல்வரும் எதிர்கட்சி தலைவரும் முன்னால் முதல்வரும் ஒன்றாக இணைந்து செயல்படுவதை இந்தியாவில் எங்கும் காணாத காட்சியாகும்.

தமிழக முதல்வர் மரணத்துக்கு கேரள முதல்வர் திரு.**பிரனவ் விஜயன்** அவர்களும் முன்னாள் முதல்வரும் எதிர் கட்சி தலைவருமான திரு.**உம்மன் சான்டி** அவர்களும் ஒன்றாக வந்து கூட்ட நெரிசலில் மலர் வளையம் வைத்தது. கேரளத்திலேயே நடந்த சில அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு இருவரும் ஒன்றாக கலந்து திறப்புவிழா செய்வதும், இருவரும் ஒரே விமானத்தில் பயணம் செய்து டெல்லி சென்று பிரதமரை சந்திப்பதும் நல்ல ஆரோக்கியமான, நாகரீகமான முன்மாதிரி செயல்படாகும்.

தமிழ்நாடு இதில் கற்க வேண்டிய பாடம் நிறைய உண்டு. முன்னாள் இன்னாள் கேரள முதல்வர்களை இந்த குறிப்பிட்ட நாகரீக செயல்பாடுகளுக்காக ஜாமக்காரன் சார்பில் வாழ்த்துகிறேன்.

# கிறிஸ்துமஸ் இல்லை

சரியாக மனம் திரும்பி - இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களுடைய உள்ளத்தில் மட்டும்தான் இயேசுகிறிஸ்து வாழ்கிறார். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் எல்லா நாளும் கிறிஸ்துமஸ், மற்றவர்களுக்கு கிறிஸ்துமஸ் இல்லை.

மற்றவர்கள் எத்தனை நடசத்திரங்களை வீட்டில் தொங்கவிட்டாலும் விலை உயர்ந்த ஆடைகளை உடுத்தி, பெரிய பெரிய கேக்கள் வெட்டிகொண்டாடினாலும் அவைகள் யாவும் இயேசு இல்லாத கிறிஸ்துமஸ்தான். ஏழைகளுக்கு உதவுதல் குஷ்டரோகிகளுக்கு உடைகள் வழங்கல் யாவும் சமூக தொண்டாகும்.

## நட்சத்திரம்

இயேசு கிறிஸ்து பிறந்த இடத்தை காட்டத்தான் கர்த்தரால் வானத்தில் இயற்கைக்கு மாறான வால் நட்சத்திரத்தை கர்த்தர் உண்டாக்கினார். அதைதான் கிறிஸ்தவர்கள் சிம்பாலிக்காக ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்தன்றும் வீட்டில் நட்சத்திரம் தொங்க வைக்கிறார்கள். ஆனால் வீட்டில் சமாதானம் இல்லை. மதுபானகொண்டாட்டம், பாவம். இத்தனையும் வீட்டில் வைத்துக்கொண்டு நட்சத்திரத்தை காட்டி எங்கள் வீட்டில் இயேசு பிறந்தார் என்று காண்பிப்பது மாயமாலம். உள்மையான கிறிஸ்தவனுக்கு **ஒவ்வொரு** நாளும் **ஒவ்வொரு** நிமிடமும் கிறிஸ்துமஸ் - ஈஸ்டர் ஆகிய சந்தோஷத்தை அனுபவிக்க முடியும் - கிறிஸ்துவின் சிலுவை. மரணத்தின் அன்பின் சந்தோஷத்தை உணர்ந்து ஒவ்வொரு நாளும் இயேசுவை துதித்து கொண்டாட இயலும். இப்படிப்பட்ட அனுபவம் உங்களுக்கு உண்டா? சகல திருச்சபைகளுக்கும் உண்டா?

**DECEMBER 2016**

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.